
www.padippakam.com

# மக்கள் பாதை

மலர்கிறது





ரூபா ஒன்று

தை, மாசி 85

படிப்பகம்

www.padippakam.com

# வரப்போகும் பொங்கலில் பெருகட்டும் மகிழ்ச்சி.!

**தை—முதல் நாள்
தமிழர்க்குத் திருநாள்!**

மெய் வருந்த உழுதவனின்
மேன்மைப் பெருநாள்!
நெய் வழியும் பாற்பொங்கல்
நெஞ்சில் இனிக்கும் நாள்!
கை ஓட்டும் ஏர்ப்பெருமை
காசினிக்கே உணர்த்தும் நாள்!
இனிக்கும் பொங்கல்!
இதயங்களைப் பாலமாய்
இணைக்கும் பொங்கல்!
நல்லுறவை நட்புணர்வை
விதைக்கும் பொங்கல்!
விளைவிக்கும் உழவினைத்
துதிக்கும் பொங்கல்!
துயர்துடைக்கும்பொங்கல்!

''உழுவார் உலகத்தார்க்(கு)
ஆணி அஃ(து) ஆற்றா(து)
எழுவாரை எல்லாம் பொறுத்து''
—என்றார் திருவள்ளுவர்.
உழவுத் தொழில் அறியாதவர்க்கும்
உயிர்தரும் அச்சாணி உழவர்
என்று பறைசாற்றுவது பொங்கல்!
ஆனால்—

தொன்று தொட்டுக் கொண்டாடும்
அறுவடைத் திருவிழாவை
இன்றுநம்மால் இன்பமுடன்
கொண்டாட முடிகிறதா?
மகிழ்ச்சியெனும் அம்பலத்தில்
நின்றாடத் தோன்றுகிறதா?

மண் பானையிலே
பால்பொங்க வேண்டிய
நாளில்—வேளையில்—நம்

கண் பானையிலே
குருதி அல்லவா பொங்குகிறது
அருவியாக!

மஞ்சள்க் கொத்து தொங்கும்
மங்கலப் புதுப்பானையை
அடுப்பில் ஏற்ற வேண்டிய
அருமைத் தமிழ் அணங்குகள்—

மஞ்சள்த் தாலியைப்
பறிகொடுத்து விட்டு
மனங்குமுறி அல்லவா
கதறுகிறார்கள்!
மானத்தைக் காக்கமுடியாமல்
பிணங்களாகவும் அல்லவா
மறைகிறார்கள் மண்ணுககுள்!

சிங்கள இனவெறியிடம்
செந்தமிழ் இனமே
செத்துச் சிதையும்போது—

பொங்கல் பெருநாளில்
பூரிப்பா பெற முடியும்?
புதுவாழ்வா தொட முடியும்?

சலங்கை மணிகள் கழுத்தில்
சதிராடும் காளைகளும்
சர்க்கரைப் பொங்கல் உண்ணும்
தமிழ்த் திருநாளில்—

இலங்கை வாழ் தமிழரோ
இரத்தக் கடலில் அல்லவா
மிதக்கின்றனர்!
துப்பாக்கிக் குண்டுகளால்
அல்லவா துளைக்கப்படுகின்றனர்!

இனியும் இந்த இனப்படுகொலை
தொடர்வதா?

இனியும் இதற்கு முடிவுகட்டாமல்
உலகத் தமிழினம் உறங்குவதா?
பொங்கல் திருநாளில்
பொங்குவதோ தமிழ்க்கண்ணீர்?

**வரப்போகும் பொங்கலிலாவது
பெருகட்டும் மகிழ்ச்சி மழை!
உயரட்டும் தமிழீழக் கொடி!**

படிப்பகம்

www.padippakam.com

மக்கள் பாதை ☆
மலர்கிறது

பாதை: 2
திருவள்ளுவராண்டு 2016

பயணம்: 2
தை, மாசி 85

அடக்கு முறைகளை
உடைத்து எறிந்திட
எழுதுகோல்
இங்கோர் —
நெம்புகோல் ஆகட்டும்!

# பாக்குநீரிணையில் அமெரிக்காவின் சதுரங்கம்!

வரலாற்றுப் பெருமைமிக்க இலங்கைத் தீவின் வடக்குக் கிழக்குக் கரையோரங்கள் தமிழீழத்தைச் சேர்ந்த மீனவர்களது கண்ணீரில் மிதந்து கொண்டிருக்கின்றது.

அதே சமயம் தொன்மைமிக்க இந்தியாவின் தென்மேற்குக் கரையோரமாக இராமேஸ்வரத்தைச் சேர்ந்த தமிழ் மீனவர்களது கண்ணீரில் மிதநது கொண்டிருக்கின்றது.

தமிழீழ, தமிழக மீனவர்களின் கண்ணீர்தான் பாக்கு நீரிணைக் கடலில் உப்பாகக் கரிக்கின்றதோ...?

நீண்டு விரிந்து கிடக்கின்ற தமிழீழத்தின் கடற்கரை முழுவதும் தமிழீழ மீனவர்களது சிறைக் கூடங்களாகவும் தமிழ் பேசும் இளைஞர்களது புதை குழிகளாகவும் மாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த மீனவர்கள் ஆதிகாலம் முதல் பரம்பரை பரையாக வென்று வந்த கடல்புறங்களில் இன்று ஸ்ரீலங்கா இனவாத அரசின் கடற்படை மரணத்தின் சந்தையாக உலாவந்து கொண்டிருக்கின்றது.

பாக்கு நீரிணைக் கடலே இருபுறங்களில் வாழும் தமிழ் பேசும் மீனவர்களது வாழ்வும் வளமும் ஆகும். இக்கடல், பாரம்பரியமாக இந்த இருதரப்பு மீனவர்களுக்கே உரியதாகும். அத்துடன் இக்கடலின் சகல வளங்களும் தமிழீழத்தினதும் இந்தியாவினதும் உடமையுமாகும்.

சிறீலங்காவின் சிங்கள பேரினவாத அரசுக்கோ அதன் கடற்படைக்கோ பாக்கு நீரிணையில் எவ்வித உறவும், உரித்தும் இல்லை.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் விரோதிகளான தமிழீழ மக்களைக் கொன்று குவிப்பதுடன் இந்தியாவிற்கு எதிரான நடவடிக்கையாக இராமேஸ்வரத்து மீனவர்களைக் கொன்று குவிப்பதன் மூலமும் இந்து சமுத்திரத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிரவேசத்திற்குத் தடையாகவும் முட்டுக்கட்டையாகவும் இருக்கின்ற இந்தியாவை வலுச்சண்டைக்கு இழுக்கின்ற நோக்குடனும் தனது கைப்பொம்மையான சிறீலங்கா அரசின் கடற்படையை பாக்கு நீரிணைக்கு அமெரிக்கா நகர்த்தியுள்ளது.

பாக்கு நீரிணையில் சிறீலங்கா அரசின் கடற்படையை முறியடிப்பதன் மூலம் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மூக்கை உடைப்பது என்பது தமிழீழத்தினதும், இந்தியாவினதும் நலன்களைப் பொறுத்து மிகவும் அவசரமானதொரு பணியென்றே நாம் கருதுகிறோம்.

தமிழ் மக்களும் விடுதலைப் போராளிகளும் இந்தியாவினதும் சோசலிச நாடுகளினதும் உலகின் முற்போக்கான அணிகளினதும் துணையுடன் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையான சிறீலங்கா அரசின் இரத்தவெறிபிடித்த காகிதக் கடற்படையை இந்து சமுத்திரத்தில் மூழ்கடிக்கும் நாளே தமிழீழ மீனவர்களதும், தமிழக மீனவர்களதும் துயரக்கண்ணீர் ஆனந்தக்கண்ணீராக மாறும் நன்னாளாகும்.

அந்த நன்னாள் வெகுதொலைவிலில்லை.

படிப்பகம்

www.padippakam.com



# சுந்தர நினைவுகள்!

● உரத்தநாடு சங்கரலிங்கம்



தோழர் சுந்தரம்

சுந்தரம்.

மலரும் தமிழீழம்.

முதலாளித்துவ அரசியல் தலைமையிலிருந்து முற்றிலுமாக விடுபட்டுப் பாட்டாளிகளின் பாதையில் மலர அயராது உழைத்த ஆற்றல் மறவன்.

மாற்று அரசியல் கொள்கை உள்ளோரையும், மக்களுக்குள் உளவு பார்க்கின்ற, சிலரென சந்தேகிப்போரையும் மரணித்துக் கொல்லும் தனிநபர் பயங்கரவாதக் கொள்கைக்கு இவன் முற்றுப்புள்ளி வைக்க நினைத்தான். இதன் விளைவு அக்கொள்கையை மேலும் நெறிப்படுத்தி மக்களே போராட்டத்தை முன்னெடுக்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தை உருவாக்க உதவினான்.

இவன் 'புதிய பாதை' என்னும் திங்களேட்டைத் தமிழீழ மக்களுக்குப் பொதுவுடைமைக் கொள்கையைப் பறைசாற்றும் போர்முரசம் ஆக்கினான். பாட்டாளிகள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் எழுதப்பட்ட கருத்துகள் மக்களின் கண்களைத் திறந்தன.

பொருளாதார நெருக்கடியால் இலங்கையில் முதலாளித்துவ ஆட்சியின் முதுகெலும்பு ஒடிந்துபோகும் போதெல்லாம் ஆட்சியில் நீடிப்பதற்கு முதலாளித்துவ அரசு மக்களைத் திசை மாற்றி இனக்கலவரங்களைத் தூண்டி விடுகிறது" என்னும் உண்மையைப் 'புதிய பாதை' முதல்த் தலையங்கத்திலேயே மக்கள் மன்றத்தில் எடுத்து வைத்தான்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் செயலதிபர் தோழர் உமாமகேஸ்வரன் தலைமையை ஏற்று, அதன் இராணுவப் பிரிவுக்குப் பொறுப்பேற்று, சிங்கள இராணுவத்தை நிலைகலங்கச் செய்தவன் சுந்தரம்.

தமிழீழ விடுதலைக்காகத் தன்னை ஒப்புக் கொடுத்த சுந்தரத்தைச் செந்தமிழ் மக்கள் சிந்தையில் வைத்துப் போற்றினர்.

சுந்தரம் புகழ் மணக்கும் சந்தனமாக ஈழத் தமிழரிடையே செல்வாக்குப் பெற்றது முதலாளித்துவத்தின் அடிவருடிகளான சிலருக்குக் காழ்ப்புணர்வைத் தந்ததில் வியப்பில்லை.

இதன் விளைவு ..

சுந்தரமென்னும் நந்தா விளக்கு அணைக்கப் பட்டான். அவன் ஏற்றி வைத்த பாதையில் சுதந்திர விளக்கைச் சுடர் குறையாமல் எடுத்துச் சென்று, இடறி, ஏகாதிபத்திய ஆதிக்கத்தைத் தகர்த்துத் தமிழீழத்தில் மக்களாட்சி மலரச் செய்வதுதான் நாம் அவனுக்குச் செலுத்தும் அஞ்சலியாகும். ●

---

***இலங்கையில் தமிழர்களுக்கு எதிராகச் சிங்கள அரசு நடாத்தும் இனப்படுகொலையை மத்திய அரசு தடுத்து நிறுத்தவேண்டும் என்று இந்திய முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.***

இந்தியாவுக்குத் தொல்லை கொடுக்கவும், அணிசேரா நாடுகளுக்கு இடையே உள்ள ஒற்றுமையைக் குலைக்கவும், இந்துமா சமுத்திரப் பிரதேசங்களைத் தனது இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் அமெரிக்கா சதி செய்து வருகின்றது. அந்த முயற்சியே இலங்கைப் பிரச்சனை என்றும் அமெரிக்காவின் கையாளாகவே ஜெயவர்த்தனா செயல்படுகின்றார் என்றும் எழுத்தாளர்கள் புகார் கூறுகிறார்கள்.

பெப்ரவரி 9, 10, திகதிகளில் திண்டுக்கல்லில் நடந்த எழுத்தாளர் மாநாட்டில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com






1983-ஆம் ஆண்டு ஜூலை இனக்கலவரத்தின் பின்னர் இன்னமும் தமிழீழப் பகுதிகளில் தமிழினப் படுகொலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதற்குச் சாட்சியாக தமிழகத்தில் உள்ள இராமேஸ்வரம் மண்டபம் அகதிகள் முகாம் தினமும் தமிழீழத்து அகதிகளால் நிரம்பி வழிந்து கொண்டிருக்கின்றது.

தமிழீழப் பகுதிகளில் சராசரியாகத் தினமும் பத்துத் தமிழர்கள் சிங்கள இனவெறி பிடித்த இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகிக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய நிகழ்வுகள் 1983 ஜூலை மாதத்தில் ஸ்ரீலங்கா தமிழீழப் பகுதிகளை உள்ளடக்கியதாக ஸ்ரீலங்கா இனவாதப் போக்குடையவர்களால் நடாத்தப்பட்ட இனப்படுகொலைகளை ஒத்தாக இருப்பினும் 1983 ஜூலை மாதக் காலப்பகுதியில் தொடர்ச்சியாகவும், கும்பலாகவும், ஒரே இடத்திலும் இனப் படுகொலைகள் நடாத்தப்பட்ட உண்மைகளை நாளேடுகளும் சஞ்சிகைகளும் சுதந்திரமாக வெளிப்படுத்திக் கொண்டதால் தமிழீழத்திற்கு ஏற்பட்ட இழப்புகளை உலகம் அறிந்து கொண்டது. அவர்களது ஏஜென்டுகளும் தற்போது ஸ்ரீலங்கா சிங்கள இனவாத அரசும், 1983 ஜூலை மாதத்து நிலைமையை நன்கு உணர்ந்தவர்களாக, திட்டமிட்டு நடாத்துகின்ற தமிழினப் படுகொலைகளுக்கு, தமிழீழப் பகுதிகளில் கிராமங்கள் தோறும் பரவலாகவும், அங்கொன்றும் இங்கொன்றுமாகவும் அப்பாவித் தமிழ்பேசும் மக்கள் கொன்று குவிக்கப்படுவதை நாம் சாட்சியாகக் கொள்ளலாம். இத்தகைய ஸ்ரீலங்கா அரசின் மனித நேயமற்ற செய்கைகள் வெளியுலகிற்கு பத்திரிகைச் செய்தித்தணிக்கை சட்ட மூலத்தின் வாயிலாக மறைக்கப்பட்டுள்ளது.

தமிழ்ப் பகுதியிலுள்ள கிராமங்கள் தோறும் நாம் சந்திக்கின்ற மனிதர்கள் தருகின்ற செய்திகள் எமக்கு அதிர்ச்சியையும் வேதனையையும் தந்து கொண்டிருக்கின்றன.

அண்மையில் பயங்கரவாதிகள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 32 அப்பாவித் தமிழ் பேசும் பள்ளி மாணவர்கள் கைது செய்யப்பட்டுக் கைகள் இரண்டும் பின்னே பிணைக்கப்பட்ட நிலையில் யாழ். மாநகரத்திலுள்ள இடுகாடு ஒன்றில் குவித்து வைக்கபட்டு எரிபொருள் ஊற்றித் தீயிடப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் தீயிடப்பட்டபோது எழுப்பிய சத்த ஒலியைத் தனது படுக்கையிலிருந்தவாறு கேட்டதாக அந்த இடுகாட்டிற்கு அண்மையிலுள்ள தமிழ்பேசும் இளம் பெண்ணொருத்தி கண்ணீர் உகுத்தவாறே சொல்லிக் கொண்டாள். இப்படி எரிக்கப்பட்ட மாணவர்களின் வயதெல்லைகள் 12க்கும் 14க்கும் உட்பட்டதாகவே இருக்கின்றதென செய்திகள் கூறுகின்றன.

இதுவரை ஏறத்தாழ 5,000 தமிழ்பேசும் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு இராணுவ வதை முகாம்களில் சிறைவைக்கப்பட்டுச் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு வருகின்றனர். இவர்கள் அனைவரும் அப்பாவிப் பொது மக்களே.

''அட்னெஸ்ரி இன்ரநஷனல்'' என்ற உலகளவில் மனித உரிமைகள் தொடர்பான நடவடிக்கைளைப் பதிவாக்கிக் கொள்ளும் சர்வதேச ஸ்தாபனம் ஸ்ரீலங்கா தமிழீழம் உள்ளடக்கிய பகுதிகளில் தமிழ்பேசும் மக்களிற்கெதிரான இனப்படுகொலைகளை நியாயமற்ற படுகொலைகள் என்றே பதிவாக்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

உலக அரங்கில் ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கைகள் இப்படி விமர்சிக்கப்பட்டாலும் இதுவரை ஸ்ரீலங்கா இனவாத ஏகாதிபத்திய அரசு அவற்றை உண்மையற்ற செய்திகள் என்றே மறுத்துள்ளமை வியப்புக்குரியதே.

படிப்பகம்


www.padippakam.com



# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

# போலித்தனங்களின்றி வரவேற்றது!

அமரர் ஒபரோய் தேவனின் படுகொலைக்குப் பின்னர் தமிழீழ விடுதலை இராணுவத்தை நெருக்கடிகளில் இருந்து பாதுகாத்து வலியதொரு அமைப்பாக அதனைக் கட்டியெழுப்பியவர்களில் தோழர் கஸ்ரோவும் தோழர் செந்திலும் தோழர் காந்தனும் முதன்மையானவர்கள். 26-1-1985ல் இடம் பெற்ற தமிழீழ விடுதலை இராணுவத்தின் பொதுச்சபைக் கூட்டத்தில் தோழர் செந்தில் தமிழீழ விடுதலை இராணுவத்தின் இணைச்செயலாளர்களுள் ஒருவராகவும் பதில் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். மறு இணைச் செயலாளராக தெரிவு செய்யப்பட்டவர் தோழர் காந்தன் அவர்களாவர்.



தோழர் தேவன்



தோழர் செந்தில்

அண்மையில் மீண்டும் தமிழீழ விடுதலை இராணுவம் பிற இயக்கமொன்றின் ஊடுருவலாலும் தாக்குதலாலும் பாதிக்கப்பட்டது. எனினும் தமிழீழ விடுதலை இராணுவத்தினர் ஒன்றுபட்டு நின்று தமது ஸ்தாபனத்தைப் பாதுகாத்ததுடன் முன்னைவிடச் சிறப்பான முறையில் தமது ஸ்தாபனத்தை அவர்கள் மீளமைத்துள்ளனர் இத்தகைய வெளியார் தாக்குதல்களின் போது சில அமைப்புகள் தமிழீழ இராணுவத்தினரின் காலை வாரி விடுவதற்கு எடுத்த முயற்சிகளும் தோல்வியடைந்து போய்விட்டது. இத்தகைய நெருக்கடிகளைக் கடந்த காலங்களில் அமைப்புகளும் எதிர்கொண்டுள்ளன. எனினும் தமிழீழ விடுதலை இராணுவம் நெருக்கடிகளை எதிர்நோக்கியபோது அவர்களுடன் கூட்டமைப்பில் உள்ள தமிழீழ மக்கள் விடுதலை கழகம் கூட்டமைப்பு வெறும் ஏட்டுச் சுரைக்காயல்ல; நடைமுறை சார்ந்தது; வளர்ச்சி பெறும் செழிப்பான தன்மையுள்ள அமைப்பு என்பதனை பல்வேறு வகையிலும் நிறுவியுள்ளனர். இத்தருணத்தில் தமிழீழ விடுதலை இராணுத்தின் இணைச் செயலாளர்களுள் ஒருவரும் பதில் தலைவருமான செந்தில் அவர்களது பேட்டியை வெளியிடுவதில் மக்கள் பாதை மகிழ்ச்சி அடைகிறது.

படிப்பகம்

www.padippakam.com



● தோழர் செந்தில் அவர்களே! தங்களது விடுதலை இராணுவத்தின் வரலாற்றை 'மக்கள் பாதை' வாசகர்களுக்கு சுருக்கமாகக் கூறுவீர்களா?

○ எமது இயக்கத்தின் வரலாறு நமது தலைவர் அமரர் தேவனின் விடுதலைப் போராட்ட வரலாற்றுடன் பின்னிப்பிணைந்துள்ளது. 1981-ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் நமது தலைவர் தேவன் தமிழீழ விடுதலைக்குப் போராட நின்ற முறபோக்கான குடிசைவாழ் இளைஞர் குழுக்களையும் ஒடுக்கப்பட்ட இளைஞர்களது குழுக்களையும் இணைத்து தமிழீழ விடுதலை இராணுவத்தை அமைப்பு ரீதியாகக் கட்டி எழுப்பினார். மிகவும் துரிதகதியில் வளர்ச்சியடைந்த நமது இயக்கம் 1982-ன் பிற்பகுதியில் இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்தது. முதலில் எதிரியின் உளவு வலைப்பின்னலை உடைப்பதையும் தமிழீழ விடுதலைப் போராட்ட எழுச்சியால் எதிரி அரசின் நிர்வாகம் சீர்குலைந்துவந்ததைச் சாதகமாக்கத் தமது சமூக விரோதச் செயல்களை ஸ்தாபிக்க முனைந்த தீய சக்திகளைக் கட்டுப்படுத்துவதிலும் கவனம் செலுத்திய நாம் 1983-ம் ஆண்டில் தோழர் தேவனின் தலைமையில் அரசு யந்திரத்தின் மீது நேரடித் தாக்குதல்கள் என்ற மட்டத்துக்கு நமது இராணுவ நடவடிக்கைகளை மேம்படுத்தினோம். இவை வெற்றிகரமாகத் தொடரப்பட்டு வருகின்றது.

● தோழர் செந்தில் அவர்களே! தமிழீழ விடுதலை ராணுவத்தின் அடிப்படைக் கொள்கைகள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுவீர்களா?

○ நமது சகல கொள்கைகளினதும் அடிப்படையாக ஏகாதிபத்திய எதிர்ப்பை நமது தலைவன் தேவன் வகுத்திருந்தார். இந்த அத்திவாரத்தில் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கும் உகந்த வகையிலும் சர்வதேச ரீதியாக அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்தைத் துரிதப்படுத்தும் வகையிலும் நமது கொள்கைகளையும் நடைமுறைகளையும் நாம் வகுத்து வருகின்றோம். இந்த அடிப்படையிலேயே நமது தலைவர் தேவன் தமிழீழத்தேசிய இன விடுதலைப்போராட்டத்தில் அதிதீவிரவாதத் செங்கோசங்களையும் குறுகிய தேசிய வாத தமிழ் வெறியையும் நிராகரித்தார். இதுவே நமது நடைமுறைகளின் அடிப்படையாகும்.

● தமிழீழ விடுதலை இராணுவத்திற்கு வெளிச் சக்திகளின் நடவடிக்கைகளால் இராணுவ ரீதியாகவும் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறதே! இதன் மூல காரணங்கள் எவை?

○ நமது வளர்ச்சி குடிசைவாழ் இளைஞர்களையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் முன்னணியில் இருத்தியது. நமது வளர்ச்சியில் ஆண்டபரம்பரையினர் மனத்தாங்கல் அடைவது விளக்கிக் கொள்ளக் கூடியதே. செங்கொடி இயக்கங்களில் கூட இத்தகைய ஆண்டபரம்பரைத் தோழர்களை நாம் சந்தித்துள்ளோம். வரலாறு நமக்கு நிரம்பவே கற்பித்துள்ளது. இத்தகைய ஒரு சூழலில் நமது தலைவர் தேவன் அரசியல் படுகொலைக்குள்ளானார்.

இதன் பின்னர் தோழர் கஸ்ட்ரோ, தோழர் காந்தன், கூச் சேகர் என்பவர்களும் நானும் மிகுந்த சிரமங்களுக்கும் ஆண்டபரம்பரையினரின் மேலாதிக்க உணர்வுகளுக்குமிடையில் நமது இயக்கத்தை சீர்குலைக்க முனைந்த சக்திகளிடம் இருந்து காப்பாற்றினோம்.

மீண்டும் இத்தகைய ஒரு பெரும் தாக்குதல்களையும் ஊடுருவலையும் 1984-ன் பிற்பகுதிகளில் நாம் எதிர்நோக்க நேர்ந்தது. எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்ற அடிப்படையில் சில இயக்கங்கள் நடந்துகொண்டன. நமக்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துக்குமிடையினலான கூட்டணிக்கு ஒரு அக்கினிப் பரீட்சையாகவும் இந்த நெருக்கடிகள் அமைந்தது. நெருக்கடிகள் நமக்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துக்மிடையிலான கூட்டு நடைமுறை சாத்தியமான ஒரு யதார்த்த உண்மை என்பதை உணர்த்தியுள்ளது.

● தமிழீழ விடுதலை இராணுவத்துக்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துக்குமிடையிலான (PLOT) கூட்டணி நடைமுறைச் சாத்தியமான யதார்த்தம் என்கிற கருத்தை எந்த ஆதாரங்களின் அடிப்படையில் தெரிவிக்கின்றீர்கள்?

நான் ஒரு கருத்தியல் வாதியல்ல. எனது கருத்துக்கள் அகநிலை சார்ந்ததுமல்ல. வரலாறும் விஞ்ஞான ரீதியான பொருள் முதல் ரீதியான யதார்த்தமே எனது கருத்துக்களின் அடிப்படை. தோழர் தேவனது மரணத்தின் பின் தவித்தமுயல் அடிக்க நின்றவர்களது மத்தியில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினர் உள்நோக்கமற்ற வகையில் நமக்கு ஒத்துழைப்புத் தந்தனர். குடிசை வாழ் மக்களதும், ஒடுக்கப்பட்ட மக்களதும் இளைய சந்ததியினர் என்ற வகையில் மேலாதிக்க உணர்வுகள் பல்வேறு முகமூடிகளின் பின்னர் தமது முகத்தை காட்டக்கூடும் என்பதை நாம் உணர்ந்திருந்தோம். செங்கொடிகளுக்குப் பின்னால் கூட இத்தகைய முகங்களை நாம் கண்டுள்ளோம், கண்டு வருகிறோம். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் இத்தகைய போலித்தனங்களின்றி நமது

படிப்பகம்

www.padippakam.com



கருத்துகளைச் சமநிலையில் சகதோழர்களாக வரவேற்றதில் நமது தோழர்களுக்கும் அவர்களுக்குமிடையில் புரிந்துணர்வு இயல்பாகவே ஏற்பட்டு வளர்ந்து வந்தது. இத்தகைய பரஸ்பரப் புரிந்துணர்வும் ஒத்துழைப்பும் 1983 ஆகஸ்ட் கலவரங்களின் பின்னர் வலுவடைந்து வந்து 1984 மார்ச் மாதத்தில் உத்தியோகபூர்வ அடிப்படையில் கூட்டாக மலர்ந்தது. நமது பல்வேறு நெருக்கடிகளின் போது நமது கூட்டு தனது யதார்த்தமான தன்மையை தெளிவாகப் புலப்படுத்தியுள்ளது.

**● தங்கள் இரு இயக்கங்களும் பங்கு பெறும் கூட்டமைப்பு எந்த அடிப்படைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது?**

○ முதலாவதாக சுயாதீனமுள்ள விடுதலை இயக்கங்களாக நாம் ஒருவரை ஒருவர் பரஸ்பரம் அங்கீகரித்துள்ளோம். இந்த அம்சம் ஒருவரது உள் விவகாரங்களில் ஏனையவர் தலையிடாத பண்பாலும் ஒருவரில் ஒருவர் மேலாதிக்கம் செலுத்தாத சிறப்பாலும் பலமடைந்து வருகின்றது.

அடுத்த முக்கியமான அம்சம் ஏனைய இயக்கங்களுடன் பரந்துபட்ட ஐக்கிய முன்னணியை அமைப்பது தொடர்பான முயற்சிகளிலும் எம் கூட்டமைப்பினர் இணைந்தே ஈடுபடுதல் வேண்டுமென்பது. இக்கொள்கை தொடர்பாகவும் நமது தோழமை இயக்கமான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரும் நாமும் மிகவும் உறுதியான வகையில் நமது வாக்குறுதிகளைக் கடைப்பிடித்து வருகிறோம்.

நமது ஒப்பந்தத்தின் அடிப்படை அம்சங்களாக மேற்கண்ட இரு அம்சங்களும் அமைந்த போதும் நடைமுறையில் நாம் பல்வேறுபட்ட துறைகளில் பல்வேறுபட்ட சூழல்களில் நமது ஐக்கியத்தின் பரிணாம வளர்ச்சியைக் கண்கூடாகக் காண்கின்றோம். இது மிகவும் நம்பிக்கைதரும் அம்சமாகும்.

**● இருவேறுபட்ட அமைப்புகள் என்ற வகையில் தங்களுக்கும் த.ம.வி.க.விற்குமிடையில் முரண்பாடுகள் ஒன்றுமில்லையா?**

○ இருவேறு விடுதலை அமைப்புகளின் இருப்பே விடுதலைப் போராட்டத்தின்போது பல்வேறு முரண்பாடுகள் அவற்றிடை தோன்றுதல் சகஜம் என்பதை புலப்படுத்தும். இங்கு முக்கியமான கேள்வி அத்தகைய முரண்பாடுகள் பகைமுரண்பாடாக முற்றுவதைத் தடுத்து அவற்றை இயக்கங்களிடையிலான சமத்துவத்தினதும் நீதியினதும் அடிப்படையில் தீர்த்து வைக்கக்கூடிய அமைப்பு நம்மிடமுள்ளதா என்பதே. இதற்கு எனது பதில் நிச்சயமாக அத்தகைய ஒரு அமைப்பை த.ம.வி.கழகமும் நாமும் இணைந்த கூட்டமைப்புத் தோன்றுவதற்கு முன்பிருந்தே கொண்டிருந்தோமென்பதே. இன்று அத்தகைய அமைப்பு உத்தியோகபூர்வமாகப் பல்வேறு மட்டங்களில் செயல்படுகின்றது. கிராமசேவையாளர் பிரிவு, உதவி அரசாங்க அதிபர் பிரிவு, மாவட்டப் பிரிவு மட்டங்களிலும் தலைமை மட்டங்களிலும் நம் இரு அமைப்புகளின் தோழர்களும் கூடி அவ்வப்போது தமக்குள் ஏற்படும் பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் பேசித்தீர்த்துக் கொள்கின்றோம்.

**● தங்களுக்கும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரும் எந்த எந்த அம்சங்களில் முரண்பாடுகளைக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை நமது வாசகர்களுக்குத் தொட்டுக்காட்ட முடியுமா?**

○ இங்கு நமது முரண்பாடுகள் எதுவும் பகைமை முரண்பாடுகளாக இல்லை என்பதை நீங்கள் கருத்தில் கொள்ளவேண்டும். பெரும்பாலான முரண்பாடுகள் நடைமுறை சார்ந்ததே. அவ்வப்போது எழும் தவறான விளக்கங்கள் புரிந்துகொள்ளாதமை தொடர்பாகவே இவற்றில்பல தோன்றுகின்றன. எனினும் அடிப்படைக் கொள்கைகள் தொடர்பாக ஏகாதிபத்திய விரோதம் முற்போன ரீதியில் தமிழ் பேசும் மக்களைத் திரட்டி தேசிய இனவிடுதலையை ஆயுதப் போராட்டத்தினூடாக வென்றெடுத்தல், சர்வதேச ரீதியாக சோசலிச நாடுகளுடனும் விரோத சக்திகளுடனும் நட்புறவு, நமது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் சிங்கள ஏகாதிபத்திய விரோத சக்திகளுடன் தோழமை போன்ற பல்வேறு அம்சங்களிலும் நமது கொள்கைகளே தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் கொள்கையாகவும் உள்ளது.

எனினும் போராட்ட முறைமை தொடர்பாக நமக்குள் சில அடிப்படை முரண்பாடுகள் உள்ளதைக் குறிப்பிடவே வேண்டும். பரந்துபட்ட இலங்கைத் தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்களது மக்கள் போராட்டத்தையே இரு அமைப்புகளும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பிரதான வடிவமாகக் கொண்டிருக்கிறபோதும் மேற்படி போராட்டத்தை கட்டி எழுப்பும் மார்க்கமாக நாம் கெரில்லாப் போராட்டத்தை ஏற்றுக் கொண்டு தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றோம். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினர் மக்களை அமைப்பு ரீதியாக அரசியல் அடிப்படையில் கட்டி எழுப்புவதன் மூலமும் இராணுவ ரீதியான தயாரிப்புகள் மூலமும் மக்கள் போராட்டத்தைக் கட்டி எழுப்புவதில் முனைந்துள்ளனர்.

www.padippakam.com



● தாய்மொழியைத் திறமையாகப் பயன்படுத்தத் தெரியாத எவனும் பிற மொழியைத் திறமையாகப் பயன்படுத்திக் கொள்ளக் கற்றுக்கொள்ளுதல் கடினம்.

— பெர்னாட்ஷா

● தொண்டு என்பது இனிமை தரும் கனவு இல்லை; கசப்பான உண்மை!

— வி. ச. காண்டேகர்

**● தமிழீழத் தேசிய இன விடுதலைப் போராட்டத்துக்கான பரந்துபட்ட ஐக்கிய முன்னணியைக் கட்டி எழுப்புவதற்கான பணிகளில் உங்கள் பங்கு என்ன என்பதைக் கூறுவீர்களா?**

○ நமது PLOT, TELA அமைப்புகளின் கூட்டணி TELO, EROS, EPRLF அமைப்புகளின் கூட்டணியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளது. இப்பேச்சுவார்த்தை கௌரவமான ஒரு ஐக்கியத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதில் இரு கூட்டணிகளில் உள்ள அமைப்புகளும் ஆர்வமாக உள்ளன. இவை தவிர இன விடுதலையில் ஆர்வம் கொண்டுள்ள ஆயுதம் தாங்காத தமிழ்பேசும் மக்களது அமைப்புகளுடனும் நாம் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளோம். பரந்துபட்ட ஐக்கிய முன்னணியின் உருவாக்கம் இலகுவான ஒரு பணியல்ல எனினும் அது நிச்சயமாக வெற்றியடையப் போகிற பணியாகும்.

**● இறுதியாக நமது 'மக்கள்பாதை' ஏட்டின் ஊடாக தமிழீழ மக்களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?**

○ எதிரியே சிறந்த ஆசான் என்கிற புகழ் மிக்க பொன் மொழிக்கமைய நமது எதிரி தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் விடுகிற தவறுகள் எம்மைப் பலப்படுத்தி வருகின்றன. இத்தருணத்தில் நமது வல்லமை யாவற்றையும் ஒன்று குவித்தும் எதிரிக்கும் அவனது மூக்கணாங்கயிற்றைக் கையில் வைத்திருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கும் எதிரான சகலசக்திகளையும் ஒன்று திரட்டியும் நமது தேச விடுதலையை வென்றெடுப்பது அவசியம். இது தொடர்பாக அன்றாடம் நமது மக்கள் செய்யும் தியாகங்களே எமது திசைகாட்டியாக உள்ளது. அவர்களது விருப்பப்படி ஐக்கிய முன்னணியைக் கட்டி எழுப்புவது, ஆக்கிரமிப்பாளரைத் தமிழீழத்திலிருந்து வெளியேற்றுவது, பரந்துபட்ட தமிழ், முஸ்லீம், மலையக தமிழ் மக்களது ஜனநாயக ஆட்சியைக் கட்டி எழுப்புவது என்கிற பணியை நாம் மக்கள் நேசத்துடனும் கொள்கைப்பற்றுடனும் விசுவாசத்துடனும் நிறைவேற்றுவோம் என உறுதி கூறுகின்றேன்.

## நிபந்தனையுடனான விடுதலையை திரு மண்டேலே நிராகரித்துள்ளார்!

அரசியல்க் கைதியாகச் சிறைவைக்கப்பட்டிருக்கும் தென்னாபிரிக்கக் கறுத்த இன மக்களின் தலைவர் திரு. நெல்சன் மண்டேலேயை சிறையிலிருந்து விடுதலை செய்வதற்கு உபகாரமாக தென்னாபிரிக்க கறுத்த இன மக்கள் தென்னாபிரிக்க அரசுக்கு எதிரான போராட்ட நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென தென்னாபிரிக்க அரசு கேட்டுக் கொண்டதையடுத்து இது போன்ற நிபந்தனையு[illegible] விடுதலையைத் தான் நிரா[illegible] திரு. மண்டேலே கூறியுள்ளார்.

தான் தனது பிறப்புரிமையை விற்க முடியாது எனவும் அப்படிப் பிறப்புரிமையை விற்றுத்தான் விடுதலையைப் பெறவேண்டுமாயின் அத்தகைய விடுதலை தனக்குத் தேவையில்லையெனவும் திரு. மண்டேலே சொன்னதாக அவரது மகள் செல்வி சின்சி மண்டேலே சொன்னார்.

''நான் எனது மக்களின் பிரதிநிதியாகவும் எனது மக்கள் அமைப்பின் பிரதிநிதியாகவும் தென்னாபிரிக்க அரசாங்கத்தின் சிறையிருக்கின்றபோதும் எமது அமைப்புத் தொடர்ந்து தடை செய்யப்பட்ட அமைப்பாகவே கருதப்பட்டுக் கொண்டிருக்கின்றபோதும் நான் மட்டும் எனது விடுதலையைப் பற்றி எப்படிச் சிந்திக்க முடியும்'' என இருபது வருடங்களாகச் சிறையிடப்பட்டுள்ள திரு. மண்டேலே முதன் முறையாக நாட்டு மக்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளக் கிடைத்த சந்தர்ப்பத்தில் கூறியுள்ளார்.

''அரசுக்கு எதிரான போராட்ட நடவடிக்கைகளைக் கைவிடும் பட்சத்தில் ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸின் உறுப்பினர்களை விடுதலை செய்வது'' என்ற கோரிக்கையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென வற்புறுத்தியதாகவும் திரு. மண்டேலே தனது மனைவிக்கு அனுப்பிய செய்திக் குறிப்பு ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

படிப்பகம்

www.padippakam.com



# அன்புமிக்க மெனிக்காவுக்கு...!

● வக்ரதுண்டர்

அன்பு மெனிக்கா! ''ஆய்போவன்''
நம்ம தாம்மை...!
உனது கடிதம் என் கரங்களில்
கிடைத்தபோது என் அறிவு
அடகு வைக்கப்பட்டிருந்தது!
ஏன் தெரியுமா? உன் கடிதத்தை நான்
படிக்காமலே கசக்கி எறிந்துவிட்டேன்.

அடகுவைக்கப்பட்ட அறிவு
அன்பு மூலதனத்தில்
மீட்கப்பட்ட பின்பு
அதைத் தேடி எடுத்துப்
படித்தபோதுதான்
உனது தார்மீக நேர்மையை
புன்னால் உணர முடிந்தது!

இன்றைய நேற்றைய பந்தமா
உதறி எறிந்து விடுவதற்கு?
பத்து வருடங்கள் அல்லவா
பழகியிருக்கிறோம் நாங்கள்!

''அனே தெய்யனே! ஒயா கொட்டியாத''?
என்ற உனது வார்த்தையைக்கேட்டு
பக்கத்து அறையில் இருந்த உனது சகோதரன்
ஓடோடிவந்து என்னை
ஓங்கி அறைந்தானே!
அதனுடனாவது முறித்துக்
கொண்டாயா நமது நட்பை!

''எங்களது உரையாடலைப்
புரிந்துகொள்ள உன்னாலேயே
முடியாதென்றால் எங்கள் இனம் எப்படி
இவர்களைப் புரிந்து கொள்ளும்?''
என்று உன் சகோதரன்மீது
போட்டாயே ஒரு போடு!

ஒவ்வொரு தடவையும்
எம்மினம் உங்கள் நகரில்
துரத்திக் துரத்திக் கொன்றழித்தபோது
நீ மட்டுமே தனித்து நின்று
எமது இனத்திற்குப்
பாதுகாப்புக் கொடுத்தாயே!
நினைவில் இருந்து நீங்கக்கூடிய
பதிவா அது?

மெனிக்கா!
''நாம் பிரிந்து போவது தேவைதானா?''
என்று கேட்கிறாயே! சேர்ந்து வாழ்வது
மட்டும் என்ன நியாயம் தானா?
சிந்தித்துப் பார்! இப்படி ஒரு கடிதம்
மிக நீண்ட காலங்களுக்குப்பின்
நீ எழுதுவாய் என்று நான்
எதிர்பார்க்கவேயில்லை!

எங்கள் பாரம்பரிய பிரதேசங்களில்
உங்கள் அரசு
சிங்கள மக்களைக் குடியமர்த்த
ஆரம்பித்த போதே சொன்னேன்:
''எங்களை எங்கள் பிரதேசத்தில்
இருந்து மட்டும் அல்ல
இந்த நாட்டை விட்டு எங்களைத்
துரத்தும் முன்ஏற்பாடு'' என்று!

அன்று—நீ சொன்னது இன்றும்
எனக்கு ஞாபகம் இருக்கிறது!
''நாங்கள் சகோதரர்கள்
என்பதை உணர்த்துவதற்குத்தான்
இந்த ஏற்பாடு என்பதை
உங்களால் புரிந்து
கொள்ளவே முடியவில்லையா?
உங்கள் தலைவர்களே இதைப் பற்றி ஒன்றும்
அலட்டிக் கொள்ளவில்லையே?''

மெனிக்கா!
எமது தலைவர்கள் எப்போது
தலைவர்களாக நடந்து கொண்டார்கள்?
அவர்கள் தங்கள் தலையையும்
பணத்தையும் பாதுகாத்துக்
கொள்ளவே நேரம் போதாதபோது
இனம் எப்படி அவர்களின்
சிந்தையில் சிந்திக்கும்?

இன்று அவர்களே ஆயுதத்தை ஏந்தியிருக்கும்
எங்கள் பின்னால் இருக்கிறார்கள்
என்று கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறாய்?
தலைவர்கள் எங்கே இருக்கிறார்கள்
என்பது எங்களுக்குப் பொருட்டல்ல; ஆனால்
எமது நாடு முக்கியம்!
அதை மீட்க வேண்டியதன்
அவசியம் நீ உணர்ந்ததே!

எங்கள் பிரச்சனை பற்றி
நீ எழுதிய கட்டுரை ஒன்றை
அண்மையில் பார்க்க
நேர்ந்தது! எங்களை நீ அங்கீகரித்தது
ஒன்றே போதும்! உன் இனம் முழுமையும்
இதை ஏற்றுக் கொண்டது
என்றே நம்புவேன்.

எங்களைப் பற்றிய நட்புப் பிரசாரத்தில் நீ
ஈடுபடுவதை எண்ணி
மனம் மிக மகிழ்கின்றேன்!
''விடுதலை என்பது உங்களுக்கு
மட்டும் அல்ல, எங்களுக்கும்
அவசியமாய் இருக்கின்றது''
என்று ஒரு வார்த்தைகுறிப்பிட்டிருக்கிறாயே!
அது ஒன்றே போதும்
உன்னை நான் புரிந்து கொள்ள! ●

சில சிங்கள உச்சரிப்புகள்.
'ஆய்போவன்'— வணக்கம்
'அனே தெய்யனே'—ஐயோ தெய்வமே!
'ஒயா கொட்டியாத'— நீ புலியா?

படிப்பகம்

www.padippakam.com



# இலங்கை புத்தசமயம் அகிம்சை மதமா?

"செகன்"

**எவ்வுயிர்க்கும் இன்னல் இழைக்காத அகிம்சை நெறியைப் பரப்பி அனைத்துலகும் போற்றத்தக்க புகழ்மலையில் ஏறி நின்றவர் கவுதம புத்தர்.**

**ஆனால் அவரது அமைதிவழி நெறிகளுக்கு நெருப்பு வைப்பதிலேயே நெஞ்சம் களிக்கின்றவர்கள் இலங்கையிலுள்ள சிங்கள—புத்த சமயத்தினர்.**

**அவர்கள் பண்டைக் காலம் முதல் கொலைத் தொழிலைக் கூசாமல் புரிந்து வருவதை சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது இக் கட்டுரை.**

—ஆசிரியர்

உலகிற்கு அகிம்சை என்னும் அறநெறிக் கோட்பாட்டைப் பரப்பியவா கவுதமபுததர் ஆவார். அவர் பெயரால் இன்றும் ஆசியாக் கண்டத்தில் பரவியுள்ள மதம் புததமதம் ஆகும்.

கவுதம புத்தருக்கு முன்னரே மகாவீரர் அகிம்சையைப் போதிக்க ஆரம்பித்து விட்டார். நடக்கும்போதும் விழிப்பாக இருந்து காலடியில் எறும்புகளைக் கூடக் கொன்றுவிடக்கூடாது என மகாவீரரின் சமண சமயம் (ஜைனமதம்) போதிக்கிறது. இன்று இந்தியாவ்ல் மட்டும் ஒரு கோடிக்கும் குறைவான மக்கள் இம்மதத்தைப் பின்பற்றுகின்றனர். புத்த சமயமோ உலகின் பல நாடுகளில் பரவியிருக்கிறது.

அந்நாளில் சமண மதத்தின் வீழ்ச்சிக்கும் புத்தமதத்தின் வளர்ச்சிக்கும் முக்கியக் காரணங்கள் இரண்டைக் கூறலாம்.

அகிம்சைக் கோட்பாட்டில் புத்தமதம் நடைமுறைக்கு ஏற்புடையதாக (சாத்தியமாக) இருந்தது. சமண மதக்கட்டுப்பாடுகள் மிகக் கடுமையானவை. பூச்சி—புழுவைக்கூட நடக்கும்போதும் கொன்று விடக்கூடாது என்பது நடைமுறைச் சாத்தியமாகாது.

அடுத்தது கவுதமபுத்தர் மன்னனின் மகனாக இருந்தார். அரண்மனை வாழ்வைத் துறந்து மதப்பிரச்சாரத்தைச் செய்தார். மன்னன் இறைவனாகக் கருதப்பட்டகாலம் அது. இளவரசரது கருத்துகள் தெய்வ வாக்காயின. மன்னனுக்கு இறைவன் என்றோர் பெயரும் உண்டு. இன்று இந்தியாவில் புத்த மதம் சார்ந்தவரும் ஒருகோடிக்குக் குறைவாகவே உள்ளனர்.

## இந்து மதத்தை எதிர்த்த மதங்கள்

ஒரு காலத்தில் 'வேத சமயம்' என்று அழைக்கப்பட்டதுதான் இந்துமதம்! அது என்றும் அகிம்சையைப் போதித்ததில்லை. ஆடு, மாடுகளுடன் ஆங்காங்கே தங்கி வாழ்ந்து புற்றரை தேடி மந்தைகளுடன் அலைந்து வாழ்ந்த ஆரியர்களால் உருவானது இந்து மதம்.

ஆரியர்கள் உற்பத்தியைப் பெருக்குவதில் துணை புரியாது கற்பனைக் கதைகளைப் பரப்பி, ஓதி, யாகங்கள் செய்து வேள்வி எனக்கூறி விலங்குகளை ஓமக்குண்டத்தில் வேகச் செய்து உண்டு மகிழ்ந்த காலம்; உற்பத்தி வீழ்ச்சியடைந்து மக்கள் பசியால் வாடிய வேளை;

அப்போது உயிர்க் கொலைக்கு எதிரான பிரச்சாரம் வேண்டியிருந்தது. வேள்விகளுக்கு எதிர்ப் பிரசாரம் செய்யப் புதிய 'கருத்தியல்' தேவைப்பட்டது.

முதலில் மகாவீரரும் பின்னர் கவுதம புத்தரும் இப்பணியைத் தொடங்கினர்; தொடர்ந்தனர்.

மக்கள் உயிர்க் கொலையை எதிர்க்க முற்பட்டனர். சமண—பவுத்த (புத்த) மதங்களைத் தழுவ முன்வந்தனர்.

இந்து மதத்தவர் புத்தமதத்தின் சில கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டு அம் மதத்தை ஒதுக்கிவிட ஆரம்பித்தனர். புலால் உண்ணாமையை இந்துமதம் ஏற்றுக் கொண்டது. 'முழுமுதற் கடவுள் இல்லை' என்ற நாத்திக வாதத்தை முன்வைத்து இந்துமதம் புத்த மதத்தைச் சாடியது.

தமிழ்நாட்டில் சமயகுரவர்கள் தோன்றி சைவசமயப் பிரசாரத்தை விரைவுபடுததினர். மன்னர்களும் நிலமுதலாளிகளும் இதற்கு ஆதரவளித்தனர். சமணசமயத்தவரை வாதில் வென்று கழுவேற்றிய கதைகளை இன்றும் புராணக்கதைகள் கூறி நிற்கின்றன.

சைவ சமயச் சான்றோரின் முனைப்பான முயற்சிகளால் 7, 8-ஆம் நூற்றாண்டுகளில் புத்தசமய ஆதிக்கம் தமிழ்நாட்டில் வீழ்ச்சியுற்றது.

இந்நிகழ்ச்சிகள் இலங்கையில் வாழ்ந்த சிங்கள பவுத்தர்களையும் பீதி கொள்ளச் செய்தது. தமிழர் எதிர்ப்புப் பிரசாரக் கை நூலான 'மகாவம்சம்' என்பதும் இக்கால

படிப்பகம்

www.padippakam.com



கட்டத்திலேயே எழுதப்பட்டது. இந்த இதிகாச நூலிலேயே இற்றைவரை சிங்களவர் தூக்கிப் பிடிக்கும் எல்லாளன் துட்டகைமுனு யுத்தமும் தமிழர் வீழ்ச்சியும் கூறப்படுகின்றன. 'மகாநாம' என்ற புத்தபிக்குவே இந்நூலை எழுதினான்.

### மதங்களின் வன்முறை

எல்லா மதங்களின் அடிப்படைக் கருத்துகளும் அன்பு, கருணை, அகிம்சை, சமத்துவம், சகோதரத்துவம் பேசிய போதும் நடைமுறையில் பொருளாதார அடிப்படை நலன்களைப் பேணும் மேல்மட்டமாகவே மனித வரலாற்றில் மதம் இயங்கி வந்துள்ளது.

ஒரு கையில் வாளும் மறுகையில் குரானுமாக சகோதரத்துவத்தைப் போதித்தது இஸ்லாமிய மதம். 300 ஆண்டுகளாக யேசுநாதரின் பெயராலேயே ஐரோப்பாவில் நடந்த சிலுவைப்போர் சிந்திய இரத்தக் கறையின் வரலாற்றுச் சின்னங்கள் இன்றும் அப்படியே உள்ளன.

நவீன கொலைக் கருவிகளுடன் யூத இனத்தலைவர் நடாத்தும் பாலத்தீனப் படுகொலைகளையும் அராபியர் தம் சகோதரரையே ஈரான், ஈராக்கில் கொன்று குவிப்பதையும் கண்முன்னே காண்கிறோம்.

ஆகவே இந்துக்களுக்கும் புத்தர்களுக்கும் இடையில் வன்முறைப் போராட்டம் நடைபெற்றது வியப்பு அன்று.

ஆயினும் புத்தமதமே அகிம்சையை அடிப்படையாகக் கொண்ட மதமாகும்; விலங்குகளை மட்டுமல்ல எந்த உயிரினங்களையுமே கொல்வதை மிகப்பெருங் கொடுமையாக—மகாபாவமாகக் கருதும் மதமாகும். இந்து மதம் ஆதியில் அவ்வாறு இருந்ததில்லை.

### இலங்கையில் புத்தமதம்

இலங்கையில் வளர்ந்துள்ள புத்த சமயமோ 'அகிம்சை' என்னும் அடிப்படைக் கோட்பாட்டையே அழித்துக் கொண்டு விட்டது. புத்தமத குருமாரே தலைமை தாங்கிக் கொலை, கொள்ளை, தீவைப்பை இலங்கையில் நடத்துவதைக் கண்டோம்; இன்றும் காண்கிறோம். இக்கொலைகள் புத்த மதக் கோட்பாடுகளை இழிவுபடுத்தவில்லையா எனப் பலர் வினவலாம். புத்த மதம் இரண்டாயிரம் ஆண்டுகளாகவே வன்முறையை நடைமுறையாகக் கொண்ட மதமாகவே இலங்கையில் நிலைத்து வந்துள்ளது.

இந்திய ஆட்சிமண்டலத்தைக் (சாம்ராச்சியத்தைக்) கட்டி விரிவாக்கிய அசோகன் கலிங்கப்போரின் கொடுமையை நேரிற் கண்டு அதனைக் கைவிட்டுப் புத்தமதப் பிரச்சாரத்தில் ஈடுபட்டதை வரலாறு அறியும். அவனே இலங்கையில் புத்தமதத்தைப் பரப்புவதிலும் முன்நின்றான். அசோகனின் தங்கை சங்கமித்திரை நட்டதாகக் கூறப்படும் அரச மரம் இன்றும் அனுராதபுரத்தில் வழிபடும் மரமாகப் பேணப்பட்டு வருகிறது. அசோகன் எத்தகைய போரையும் பின்னர் எதிர்த்தான். எல்லா சமயத்தவரையும் இனத்தவரையும் ஒரே மனித இனமாகக் கருதினான்.

> அசோகன் போல் அல்லாது, 'மகாவம்சம்' என்ற சிங்கள-பவுத்த மதத்தின் பைபிளை எழுதிய புத்தகுரு மகாநாம என்ன எழுதியுள்ளான் தெரியுமா?
>
> ''பவுத்த சாசனத்தை—புத்தமதக் கோட்பாடுகளை—எதிர்ப்பவர்களைக் கொல்வதில் தவறு இல்லை''— என்று கூறியுள்ளான்.

ஈழத்தமிழ் வேந்தர்களில் இணையற்ற நீதிமானாகப் புகழ்பெற்றவன் எல்லாளன்.

அந்த எல்லாளன் துட்டகைமுனு நடாத்திய போரில் பல்லாயிரக்கணக்கானோர்—இறந்து விட்டனர்; புத்தமதத்தைச் சார்ந்த துட்டகைமுனு அந்தக் கொலைகளுக்குதானே பொறுப்பாளி எனக் கவலையடைகிறான்.

அவ்வேளை பவுத்த சமயகுருவோ கைமுனுவுக்கு இப்படி ஆறுதல் கூறுகிறான்:

''மன்னா, கவலைப்படாதே! நீ ஒன்றரை மனிதரை மட்டுமே போரில் கொல்ல நேரிட்டது''. அவனது கூற்றுக்கு உரிய விளக்கம் இதுதான் :

''ஒரு மனிதன் புத்தபிக்கு; மற்ற அரை மனிதன் புத்த சாசனத்தை ஏற்ற புத்த மதத்தவன். ஏனைய இந்து மதத்தவரைக் கொன்றது பாபம் இல்லை''.

மகாநாம என்னும் பவுத்த குரு தீட்டிய மகாவம்சம் இக்கதையைக் கூறுகிறது.

இன்றும் இலங்கை பவுத்த மதத்தவர் இதையே தங்களது தலையாய கருத்தியலாகக் கொள்கின்றனர்; இதையே குறிக்கோளாக ஏற்றுக் கொலைகளைப் புரிகின்றனர்.

சென்ற 37 ஆண்டுகளில் 4000க்கு மேற்பட்ட தமிழர்களைக் கொன்றதை இவ்வாறே நீதிப்படுத்துகின்றனர். இலங்கையிலுள்ள ஒவ்வொரு பிக்குவும் புத்தமத வெறியனும் இதை ஏற்றுக் கொள்கிறான்.

ஆகவே இலங்கையில் உள்ள புத்தமதம் அகிம்சை மதம் என்று கூற முடியுமா? கோட்பாட்டை வைத்தே நாம் முடிவு செய்ய வேண்டும். அகிம்சையைப் போதித்த கவுதம புத்தருக்கு அவமானமே இழைக்கின்றனர் சிங்கள புத்த சமயத்தினர்.

படிப்பகம்

www.padippakam.com





# ஒரு புது யுக விடியலை நோக்கி...

எஸ்·ஆர்·ராஜ்

என்
மென்பஞ்சு இறகுகள்
வலிய சிறகுகளாகி
ஒரு
நெடிய பயணத்துக்கு
நாள்பார்த்துக் கொண்டிருக்கின்றன!

அது
கடக்கப்போகும்
புயல்நிறைந்த விண்வெளியை
இப்போது
போர்மேகங்கள்
சூழத்தொடங்கிவிட்டன...

என்
வெண்மைச் சிறகு
உயரே...
மிக உயரே...
பஞ்சுப் பொதியாய்
சமாதான யாத்திரையைச்
சரித்திரம் படைப்பதற்காய்
முடமாகிப் போனாலும்
மூச்சடங்கும்
நாள்வரையில்...
இரத்த ஊற்றுக்களை
இல்லாமற் செய்வதற்காய்
போர் ஒழிய
புனிதம் நிறைந்த
பயணம் தொடரப்
பறக்கிறது!

உருவ மகாநாடுகள்
உருப்படாத வேளையில்
பலவீனப் பாதயாத்திரைகள்
பயனற்று விட்டபோது
உயர எழுகின்றேன்!

என்
உள்ளுக்குள்
வெண் புறாக்கள்
சமாதானச் செய்திகளைச்
சரிபார்த்துக் கொண்டிருக்கின்றன!

அவை
திக்கொன்றாய்ப்
பறக்கும் வேளை
கறைபட்ட
கரிய மேகங்கள்
வெண்மேகங்களாய்
திருமாற்றம் செய்யப்படும்!

அதற்குள்
மூர்க்கக் கழுகுகள்
இந்த
மென் புறாக்களை
இரையாக்காதிருக்க
அங்கங்கே பறக்கும்
அத்தனை பறவையையும்
ஒன்று கூட
அழைக்கின்றேன்.

அவை
ஒரு முகமாய்
போர் ஒழிந்த
புது யுகத்தை
மனிதத்துவ மலர்ச்சியினை
உருவாக்கிக் காட்டட்டும்!

அது
இந்த
புனிதப் பூவுலகைக்
கருணைக் கிடமில்லா
கசாப்புக் கடையாய்
மாற்றாது......

உறவுகள் நிறைந்து
உன்னத கோளமாய்ச்
சூரியக் குடும்பத்தில்
சொர்க்க புரியாய்த்
திகழச் செய்யும்.

படிப்பகம்

www.padippakam.com






# ஜே. ஆர் ஜெயவர்த்தனாவின் பகற்கனவுகள்!

ஜே. பாலன்

"இந்திய மீனவர்களுக்கு எதிராகச் சிறீலங்கா அரசு பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதுவும் இந்தியாவுக்கு அண்மையிலுள்ள யாழ்ப்பாண மாவட்டத்துப் பொதுமக்கள்மீது: அவர்கள் நடாத்தும் தாக்குதல்களும் ஒருமித்த நிகழ்ச்சிகளாகவே அமைந்துள்ளன" என்று இந்தியத் தலைமையமைச்சர் திரு. இராஜீவ்காந்தி அவர்கள் 14—12—84-ல் கோவையில் பேசும் போது தெரிவித்துள்ளார்.

தமிழ்பேசும் மக்கள் விரோதக் கொள்கையும், சிறீலங்கா இனக்கொலை அரசின் ஏகாதிபத்திய ஆதரவுக் கொள்கையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக உள்ளமையே இத்தகைய ஒருமைப்பாடுகளின் மூல ஊற்றாகும்.

இந்துமாக்கடலில் தமிழீழ மக்களது போராட்டமே அதிதீவிரமான ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கையாக உள்ளது. அதே வேளையில் இந்துமாக்கடலில் இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைகளும் ஏகாதிபத்தியத்திற்குப் பெரும் அறைகூவலாக உள்ளது. தமிழ் பேசும் மக்கள் விரோத நடவடிக்கைகளை இந்திய விரோத நடவடிக்கைகளுடன் இணைப்பதன் மூலம் இந்துமாக்கடலில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முழு நலன்களினதும் காவல் நாயாகத் தன்னைக் காட்டிக் கொள்ள ஜே. ஆர். ஜெயவர்த்தனா முனைகிறார். எனினும் இதற்குக் கைமாறாக அவர் எதிர்பார்க்கும் இறைச்சித் துண்டுகளைத் தர அமெரிக்கா தயாராக இல்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில் அமெரிக்க ஏகாதிபத்திய அரசு எப்பொழுதும் இறைச்சித் துண்டங்களற்ற வெறும் எலும்புத் துண்டுகளைச் கொடுத்தே செயலாற்றும் வழக்கம் உடையதாகும்!

## ஜெயவர்த்தனா அரசின் வஞ்சகப் பிரச்சாரம்!

தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஒருவகை இந்தியத் தலையீடாக உலகிற்குக் காட்டுவதற்குச் சிறீலங்கா அரசு பல காலமாகவே முயற்சி எடுத்து வருகின்றது. இதன் அடிப்படையில் இந்தியாவைச் சூழ உள்ள இந்திய எதிர்ப்பு அரசுகளுடனும் அமெரிக்காவுடனும் இந்தியாவிற்கு எதிரான ஓர் அணியை உருவாக்குவதற்கான முயற்சிகளில் சிறீலங்கா அரசு முனைந்து வருகின்றது.

1983 நடுப்பகுதியில் இந்திய எதிர்ப்பு நாடுகளுக்கும் அமெரிக்காவிற்கும் ஜெயவர்த்தனா மேற்கொண்ட பயணத்தின் இரகசியமே சிறீலங்காவை மையப்படுத்திய இந்திய எதிர்ப்பு அணி ஒன்றினை இந்துமாக்கடலில் அமைப்பதற்கே ஆகும். இது தொடர்பான சிறீலங்கா அரசின் மூல உபாயம் பின்வரும் அடிப்படையில் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது.

1. தமிழீழ விடுதலைப் போராட்டம் உண்மையில் பிரிவினையை அடிப்படையாகக் கொண்ட போராட்டயல்ல; தமிழ் பேசும் இளைஞர்களுக்கும் சிங்கள இடது சாரிகளுக்கும் நெருங்கிய தொடர்புள்ளது என்ற பிரச்சாரம், தமிழ் பேசும் மக்களின் விடுதலை இயக்கங்கள் தமிழீழம் சிறீலங்கா உட்பட்ட முழு இலங்கைப் பகுதியையும் புரட்சி ஒன்றின்

படிப்பகம்

www.padippakam.com



மூலம் (கம்யூனிஸ்ட்) நாடாக்குவதற்குத் திட்டமிட்டு வேலை செய்கிறன.

2. இத்தகைய விடுதலை அணிகளின் முயற்சிகளை இராணுவ வழிமுறையில் முறியடிப்பதற்கு இந்தியாவின் நடவடிக்கைகள் தடையாக உள்ளன.

3. கம்யூனிஸ்ட் நாடுகள் இத்தகைய விடுதலை அணிகளுக்கு ஆதரவு அளிக்கின்றன.

4. இந்தியாவிற்கு எதிரான ஒரு தளமாக இலங்கையைப் பலப்படுத்துவதற்கான அவசியத்தை அமெரிக்கா உணருதல் வேண்டும்.

5. இந்துமாக்கடலில் அமெரிக்காவின் நலன்களுக்குப் பெருத்த ஆபத்தாக உருவாகியுள்ள தமிழீழ விடுதலைப் போராட்டத்தை இராணுவ முறையில் ஒடுக்குதல் அவசியம்; இத்தகைய முயற்சியில் பரவலான இனக் கொலை தவிர்க்க முடியாதது.

## அமெரிக்காவின் சதித்திட்டம்

இந்துமாக்கடலில் அமெரிக்க நலன்களுடன் தமிழ் பேசும் மக்கள் மீதான இன ஒடுக்கலையும் இணைப்பதில் ஜெயவர்த்தனா அரசு வெற்றி கொண்டுள்ள போதிலும் தமிழ் பேசும் மக்கள் மீதான இன ஒடுக்கலையும் இந்தியாவைச் சீர்குலைப்பதையும் ஒருங்கிணைக்கும் தனது இரண்டாவது முயற்சியில் ஜெயவர்த்தனா அரசு ஒரு போதும் வெற்றி பெறப் போவதில்லை.

இந்தியாவைச் சீர்குலைத்தால் மட்டுமே தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கலாம் என்ற சிறீலங்கா அரசின் விஷப்பரீட்சையை ஏற்றுக் கொள்ள அமெரிக்கா தயக்கம் காட்டுவதைச் செப்டம்பரில் சிறீலங்காவிற்கு வருகை புரிந்த அமெரிக்க அரசின் பிரதிநிதி ஜெனரல் வேணன் வோல்டஸ் சிறீலங்கா அரசுக்குத் தெளிவுபடுத்தியுள்ளார்;

இந்தியாவைச் சூழ்ந்துள்ள அமெரிக்காவின் நட்பு நாடுகளையும் இலங்கையையும் தளங்களாகப் பயன்படுத்தி இந்தியாவிற்கு எதிரான போர் நெருக்கடியையும் சீர்குலைப்பு நடவடிக்கைகளையும் அமெரிக்கா தீவிரப்படுத்த வேண்டுமென்பதே ஜெயவர்த்தனாவின் திட்டமாகும். அதேவேளை இத்தகையதொரு திட்டத்தை ஏற்றுக்கொள்ளுவதில் இராணுவ வழியாகவும் அரசியல் வழியாகவும் உள்ள ஆபத்தை அமெரிக்கா நன்கு உணர்ந்துள்ளது.

இதனால்தான் கொழும்புத் தமிழர்களை மையமாகக் கொண்ட தமிழ் மக்களின் மேல் வர்க்கத்துடன் சமரசம் செய்து கொண்டு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அவர்களது துணையுடன் முடிவுக்குக் கொண்டு வரும்படி இலங்கை அரசிடம் வலியுறுத்திக் கொள்ளுமுகமாகவே ஜெனரல் வோல்டஸ் என்பவரை அமெரிக்கா கொழும்பிற்கு அனுப்பியுள்ளது. எனினும் சதி நோக்கத்துடன் கூடச் சமரசத் திட்டம் ஒன்றை முன்வைக்க இயலாத அளவிற்குச் சிங்கள மக்கள் மத்தியில் வகுப்புவாத நஞ்சை விதைத்து வைத்திருக்கும் ஜெயவர்த்தனா அரசு அரசியல் நெருக்கடிக்குள் அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருக்கின்றது.

## இந்தியாவை வம்புக்கு இழுக்கின்ற ஜெயவர்த்தனா!

இந்திய மீனவர்களைத் தாக்குவதன் மூலம் இந்தியாவை வம்புக்கிழுத்தால் இலங்கைப் பிரச்சினையில் அமெரிக்காவை நேரடியாக இழுத்துவிட முடியும் என்கின்ற ஜெயவர்த்தனா அரசின் கடைசி நம்பிக்கையும் செயற்படவில்லை.

> *செல்வத்தினால் செருக்கு மிகுந்தவர்கள் தங்கள் உடைமையை மட்டும் அல்ல; உள்ளத்தையும் அடமானம் வைக்கத் தயங்க மாட்டார்கள்.*
>
> — மாக்சிம் கார்க்கி

இதற்காக வியட்னாம் மக்களுக்கு நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டவர்கள் ஆவோம்.

இந்தியா ஒன்றும் கிரனடா நாடு அல்ல என்பதை அமெரிக்கா நன்கு உணர்ந்தே உள்ளது.

அரசியல் பிரச்சினைகளை இராணுவ வழிமுறை மூலம் தீர்த்துக் கொள்ள முனையும் ஜெயவர்த்தனா அரசு தனது அழிவைத் தானே தேடிக் கொள்ளும். இதற்கு இந்திய மீனவர்களுக்கு எதிராகவும் தமிழீழ தமிழ் பேசும் மக்களுக்கு எதிராகவும் ஒருமித்த தாக்குதல்களில் சிறீலங்கா பௌத்த சிங்கள பேரினவாத ஏகாதிபத்திய அடிவருடி அரசு ஈடுபடுவது இதற்கு மேலதிகமான அத்தாட்சியாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# விடுதலைப் பெரும்போரில் கெரில்லா முறையின் பங்கு!

வ.ஐ.ச. ஜெயபாலன்

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் அடிக்கடி பிழைபடக் கையாளப்படும் பதங்களில் கெரில்லாப் போராட்டம் என்பது முக்கியமானதாகும்.

சிலர் சகல விடுதலைப் போராட்ட வடிவங்களுக்கும் பொதுவான பெயராகக் ''கெரில்லாப் போராட்டம்'' என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறார்கள். வேறு சிலரோ ''கெரிலாப் போர்'' சர்வதேசத்திற்கும் பொதுவானதும் முழு முதலானதுமான போராட்ட வடிவமாகக் கைக்கொள்ளுகின்றனர். இரண்டாவது போக்கு 1960 ஆண்டுகளில் முதன்மைப்பட்டு உலகின் பல்வேறு நாடுகளில் குறிப்பாக இலத்தீன் அமெரிக்க நாடுகளின் புரட்சிகளை நாசம் செய்தது.

தேசிய இனவிடுதலைப் போராட்டம் ஒன்றில் இத்தகைய தவறுகள் விடுதலைப் போராட்டத்தின் தோல்விக்கு மட்டுமல்ல இனக் கொலைக்கும் வழி வகுப்பதன் மூலம் நமது தேசிய இனத்தின் இருப்புக்கும் நாசம் செய்யத்தக்கதாகும்.

''கெரில்லாப் போராட்டம்'' என்பது விடுதலைப் போரின் பல்வேறு வடிவங்களில் முக்கியமானதொரு வடிவமாகும்.

சில நாடுகளின் புரட்சிகளில் குறிப்பாக சீனப் புரட்சியிலும் கியூபா புரட்சியிலும் நீடித்த கெரில்லாப் போராட்டம் நெடுங்காலத்திற்கு முதன்மை பெற்றுள்ளது.

இத்தகைய சந்தர்ப்பங்களில் பிரதேசங்கள் அமைக்கப்பட்டு, நிரந்தர இராணுவப் பிரிவுகள் உருவாக்கப்பட்டு, மீட்கப்பட்ட பிரதேசங்கள் அகட்டிச் செல்லப்படும் போக்கு முதன்மை பெறும். அப்போது கெரில்லாப் போராட்ட வடிவம்-'முறைசார் இராணுவ' (Regulated Army) உபாயங்களுக்கு வழி விட்டுக் கொடுத்துள்ளது.

## தற்கொலைப் பாதை?

கெரில்லாப் போராட்டத்தை விடுதலைப் போராட்டத்தின் முழு முதல் வடிவமாகக் கருதும் 'கிணற்றுத் தவளை' வாதமும், நீடித்த கெரில்லாப் போராட்டம் முதன்மை பெறாத நாடுகளின் புரட்சியில் கோளாறு உள்ளது என்ற அபாண்டமான கருத்தும் 1960-ஆம் ஆண்டுகளில் முதன்மை பெற்றிருந்தன.

இத் தவறு சீனப் புரட்சியை உலகப் பொதுமையாக்கும் தவறான போக்கினால் உருவானதாகும். இத் தவற்றின் வளர்ச்சி நகர்ப்புறக் கெரில்லா நடவடிக்கைகள், கிராமப் புறக் கொரில்லா நடவடிக்கைகள் போன்ற கெரில்லாப் போராட்டத்தின் ஒரு அம்சத்தையே பிரதான போராட்ட வடிவமாகக் கருதும் அளவிற்குச் சீரழிவுப் போக்கை விடுதலைப் போராளிகள் மத்தியில் ஏற்படுத்தியது. 1960-ஆம் ஆண்டுகளில் சீனப் புரட்சியையும் கியூபாப் புரட்சியையும் யானையைப் பார்த்த குருடர்களைப் போன்ற தவறான பார்வையில் (பல புரட்சியாளர்களால்) இத்தகைய தவறுகள் புரட்சியின் தத்துவங்களாக வளர்க்கப்பட்டன.

இத்தகைய தத்துவங்கள் பல இலத்தீன் அமெரிக்க நாடுகளில் விடுதலைப் போராட்டத்தை வெறும் தாக்குதல்களின் தொகுப்பாகக் கீழ்ப்படுத்தி, தற்கொலைப் பாதையில் இட்டுச் சென்றுள்ளன. இதன் தொடர்ச்சியாக உருவாகிய ஜப்பானிய செம்படை, ஜேர்மனிய பாடோமைனே போன்ற அமைப்புக்கள் விடுதலைப் போராட்டத்தினைப் 'பயங்கரவாதமாகவே' குறுகிய நோக்கோடு பார்த்தனர்.

## முதன்மைப் படுத்த முடியாத போர்முறை!

இன்று நாம் சர்வதேச அனுபவங்களில் இருந்தும் நமது தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அனுபவங்களிலிருந்தும் நிறையக்கற்றுக் கொண்டுள்ளோம்.

வர்க்கப் போராட்டம் போல் அல்லாது தேசிய விடுதலைப் போராட்டம் அதன் ஆரம்ப கால கட்டத்திலிருந்தே இனக் கொலை நிலையினை எதிர் நோக்கும் ஒரு போராட்டமாகும். இன்றைய நவீன உலகில் பொருத்தமான புவியியலமைப்பு உள்ள நாடுகளில் கூட நீடித்த கெரில்லாப் போராட்டம் போராட்டத்தின் மூல உபாயமாக முதன்மை பெறவில்லை?

படிப்பகம்

www.padippakam.com



நமது தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் இத்தகைய மூல 'உபாயம்' சில சாதக விளைவுகளையும் பல பாதக் விளைவுகளையும் ஏற்படுத்தியுள்ளது. நமது மக்கள் இனக் கொலைக் களத்தில் நிற்கின்ற போது இனக்கொலைக்கு எதிரி சாக்குப் போக்குகள் தேடிக் காத்திருக்கின்ற நிலையில் இத்தகைய பிழையான மூல 'உபாயங்களால்' விடுதலைப் போராட்டத்திற்கு நன்மைகளை விட தீமைகளே அதிகமாகின்றது. ஆனால் எதிரிக்கோ தீமைகளைவிட நன்மைகளே அதிகமாகிறது. கெரில்லாப் போராட்டம் பற்றிய கட்டுரைகள் இடம்பெறுவது அதை தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மூல உபாயமாக முதன்மைப்படுத்துவதற்காக அல்ல; மாறாக முக்கியமான போராட்ட வடிவங்களில் இதுவும்ஒன்று. இப்போராட்ட அனுபவங்களில் இருந்து கற்றுக்கொள்வது ஒரு போராளியைப் பொறுத்து முக்கியமாகும் எனவேதான் நாமும் இதை முதன்மைப் படுத்துகின்றோம்.

## 3000 பேரைக் கொன்ற அமெரிக்க நச்சுவாயு!

இந்தியாவில் உள்ள மத்தியப் பிரதேச மானிலத் தலைநகர் போபால். அங்குள்ள பூச்சி மருந்துத் தொழிற்சாலையிலிருந்து கசிந்துவந்த நச்சு வாயு ஏறத்தாழ 3000 பேரைப் பலி வாங்கிவிட்டது. பல்லாயிரக் கணக்கானோர் கண்பார்வை இழந்தும் உடல் ஊனம் உற்றும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வளவு பேரழிவுகளுக்கும் காரணம் 'யூனியன் கார்பைட்' என்னும் நிறுவனம்தான். அது எந்த நாட்டைச் சார்ந்தது தெரியுமா?

இனப்படுகொலை புரியும் சிங்கள அரசுககுத் துணைபுரியும் அமெரிக்காதான்!



வெறிபிடித்த சிங்களக் கடற்படையினரால் 08. 01. 85 அன்று பாம்பனைச் சேர்ந்த மீனவத் தோழர்கள் அல்போன்ஸ், தூசைநாயகம், ஆகியோர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இலங்கை அரசின் இனவெறி இந்தியக் கடல் எல்லையையும் தொட்டிருப்பதைக் கண்டு உலகமே அதிர்ச்சி அடைந்திருக்கின்றது.

இக் கோரச் சம்பவத்தில் உயிரிழந்த மீனவத் தோழர்களுக்கு எமது அஞ்சலியையும், அவர்தம் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தோழர் அல்போன்ஸ்சின் மரண ஊர்வலம் தங்கச்சிமடத்தின் நடந்த போது ஆயிரக்கணக்கான மீனவத் தோழர்களும், தமிழக அரசு அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

லண்டனிலுள்ள தமிழ் நடவடிக்கைக் குழுவின் அமைப்பாளர் திரு. மகரசிங்கம் இவ் ஊர்வலத்தில் கலந்துகொண்டார்.

படம்: குட்லக் காதன் (PLOT)

படிப்பகம்

www.padippakam.com



# சிங்கள அரசின் நடவடிக்கைகளும் தமிழீழப் போராட்டத்தின் தனித்தன்மைகளும்..!

நாகரீகமடைந்த மனிதகுலம் வெட்கப்பட்டுத் தலைகுனியும் நிகழ்ச்சிகளில் சிங்கள அரசின் இன்றைய நடவடிக்கைகளும் ஒன்றாகத் திகழும் என்பது நிச்சயமாகிவிட்ட இவ்வேளையில், ஒரு மானிட சமூகமானது இன்னொரு மானிட சமூகத்திற்கெதிரான ஈனத்தனமான நடவடிககைககளை மேற்கொள்வதற்கான காரணம் என்ன என்பதை, உலகில இதுவரை நடைபெற்று முடிந்த போராட்டங்களுடன் தமிழீழப் போராட்டத்தை ஒப்புநோக்குவதன் மூலம் தெளிவுற முடியும்.

உலகில் எந்தவொரு நாட்டு மக்களும் மேலாதிக்கத்தை விரும்பி ஏற்றுக்கொளவதில்லை. மேலும் மேலாதிக்கம் என்பது வெளிப்படையாகத் தெரியக் கூடிய ஒரு குறிப்பிட்ட ஒரு பொருளுமல்ல, சமூக வாழ்க்கையில் மனிதனது வாழ்சுழல்களில் மேலாதிக்கம் தனது பாதிப்பை ஏற்படுத்தும் போதுதான் மனிதன் மேலாதிக்கத்தை உணர முற்படுகின்றான். மேலாதிக்கம் அவனது சுய வாழ்க்கையைப் பாதிக்காத வகையில் அவன் மேலாதிக்கத்தை எதிர்த்துப் போராட முன்வருவதும் குறைவு. அவ்வகையில் அதிகமாகப் பாதிக்கப்பட்டு மேலாதிக்கத்தை அகற்ற அவன் முயலுபபோதுதான் மேலாதிக்கததின சுடுமையான, சிலந்தி வலையை ஒத்த வலைக்குள் சிக்கிக் கொண்டிருப்பதையும், அவ்வலையின் வலிமையையும் உணர்கின்றான்.

ஒரு இனம் மற்றொரு இனம் மீது மேலாதிக்கம் செலுத்துவது என்பது ஒரு சில நாட்களில ஒரு சிலர் நினைத்தவுடன் நடக்கும் காரியமல்ல. மேலாதிக்சத்திற்கான கருத்து உருவாவதற்குக் கலாச்சாரம், பொருளாதார மேபாடு போன்றன காரணங்களாக இருந்தாலும், பொருளாதார மேம்பாட்டுக்கான காரணமே முகாமையாகத் திகழும்.

மேலாதிக்க எண்ணம் நிறைவேற்றப்படுவதற்காக ஒடுக்குபவர்களால் பல யுக்திசள் கையாளப்பட்டுள்ள சரித்திரத்தை, நாம் காண்கின்றோம். நேரடியான மேலாதிக்கம், மறைமுக மேலாதிக்கத்தைப் பகுத்தாராயலாம். நேரடியாக மேலாதிக்கம் காலனி நாடுகளில் பிரிட்டன், பிரான்சு, போர்த்துக்கீசியர்களால் நேரடி இராணுவ நடவடிக்கைகள் மூலம் ஆக்கிரமிப்பு மூலம் நடைமுறைப் படுத்தப்பட்டு இராணுவங்களைக் கொண்டு நிலை நிறுத்தப்பட்டதை யாரும் மறந்திருக்க முடியாது.

மேலாதிக்கம் இராணுவ நடவடிக்கைகளினால் மட்டுமன்றி, கலாச்சாரம், மொழி, பொருளாதாரக் கொள்கையினாலும் ஏற்படுத்தப்படமுடியும் என்பதை இன்றைய வரலாறு நிரூபணம் செய்து கொண்டிருக்கின்றது,

மேலாதிக்கத்தின் தோற்றம் எவ்வடிவத்தில் தொடங்கப்பட்டு இருந்தாலும் அதனை நிலை நிறுத்துவது அடக்குமுறை இயந்திரமேயாகும். அவ்வகையில் இன்று தமிழீழததில் சிங்கள மேலாதிக்கத்தை நிலைநிறுத்த சிங்கள அடக்குமுறை இயந்திரம் கடுமையாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. சிங்கள அடக்குமுறை இயந்திரத்தின் செயல் தன்மைக்கும் ஏனைய விடுதலைப் போராட்ட வரலாறுகளில் இடம்பெற்ற அடக்குமுறை இயந்திரங்களின் செயல் தன்மைகளுக்கும் பாரிய வித்தியாசத்தை ஏற்படுத்துவதற்குக் காரணமாகத் திகழ்வது மேலாதிக்கத்திற்கான சாரணமும் அம்மேலாதிக்கத்தை நடைமுறைப்படுத்தக் கடைப்பிடிக்கப்பட்ட வழிமுறைகளுமேயாகும்.

இவ்வகையில் சீனப்புரட்சியில், சியாங்கேய் சேக்கின் தலைமையில் நடைமுறைப்படுத்தப்பட்ட முதலாளித்துவ நிலபிரபுத்துவ மேலாதிக்கம் என்பது வர்க்க மேம்பாட்டிற்காகப் பொருளாதாரச் சுரண்டலுக்காக நடைமுறைப்படுத்தப்பட்ட ஒன்றாகும். இவ்வகையான மேலாதிக்கத்திற்கு அவர்கள் கலாச்சார, பொருளாதார நடவடிக்கைகளை முகாமையாகவும் இராணுவ நடவடிக்கைகளை இறுதியாகவும் கடைப்பிடித்தனர். சியாங்கேய்சேக் கும்பலின் இத்தகைய மேலாதிக்கக் கலாச்சாரத்திற்குப் பயன்பட்ட கன்பூசியஸ் பிற்போக்குக் கலாச்சாரத்திற்கு எதிராகப் பாட்டாளி வர்க்க முற்போக்குக் கலாச்சாரமும் சிறுபான்மை முதலாளிகளுக்கு மட்டும் பயன்தரக் கூடிய சுரண்டல் பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிராகப் பெரும்பான்மை மக்களுக்குப் பயன்தரக் கூடிய சோசலிசப் பொருளாதாரக் கொள்கைகளும் பெரும்பான்மையான மக்க

படிப்பகம்

www.padippakam.com



ளின் ஆதரவைப் பெறக்கூடியதாக இருந்த மையால் மாபெரும் மக்கள் எழுச்சியை உரு வாக்கக் கூடியதாக இருந்தது.

இதேபோல் கியூபாவில் நடந்த போராட் டமானது பிற்போக்குக் கலாச்சாரம், சுரண் டல்ப் பொருளாதாரம் போன்றனவற்றை எதிர்த்து நடாத்தப்பட்ட போராட்டமாக இருந்தது.

வியத்நாமில் பிரெஞ்சுக் காலனியாதிக் கத்திற்கு முன்னர் முற்போக்கான மாண்ட ரின் சமூக அமைப்பு நிலவிவந்தது. ஆனால் பிரெஞ்சுக் காலனியாதிக்கம் தனது சுரண்ட லுக்காக நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ சமூக அமைப்பை ஏற்படுத்த முயன்றது. இந்தச் சமூக மாற்றத்திற்குப் பிரெஞ்சுக் கால னியாதிக்க அரசு தனது அடக்குமுறை இயந் திரத்தையே பெரிதும் பயன்படுத்தியது. அந்நியர்கள் அவர்களது நலனுக்காகத், தங்களது தாய்நாட்டில் நடத்தும் மேலாதிக் சத்தை வியத்நாமிய மக்கள் ஒன்று திரண்டு எதிர்த்தனர். 1954-ம் ஆண்டுக்குள் நாட்டின் எழுபது சதவீதமான பகுதிகள் அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்டு மாண்ட ரின் சமூகப் பொருளாதார அமைப்பை ஒத்த சோசலிசப் பொருளாதாரச் சமூக அமைப்பாக மாற்றப்பட்டது.

டைன்பின்பூ தனது ராணுவ ரீதியான மேலதிக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டதை உணர்ந்த பிரெஞ்சுக் காலனியாதிக் கம் சூழ்ச்சியாக வேறுவழிகளில் மீண்டும் மேலாதிக்கத்தை உட்படுத்தப் பேச்சுவார்த் தைகள், தேர்தல்கள் என்ற போர்வையில் 1954-ம்ஆண்டு வியத்நாமைத் தற்காலிகமாக இரண்டாகப் பிரித்தது. வட வியத்நாமில் தோழர் ஹோசிமின் தலைமையில் மக்கள் குடியரசு ஏற்படுத்தப்பட்டு சோசலிச அமைப் பாக மாற்றப்பட்டு விட்டதைக் கண்ட அமெரிக்க ஏகாதிபத்தியம், தென்கிழக்காசியா வில் தனது வர்த்தகச்சுரண்டலுக்கான சந்தை கள், வடவியத்நாமைப் பின்பற்றி தன்னிட மிருந்து பறிபோகக்கூடிய சூழல்கள் உருவாகி விட்டதைக் கண்டு தென் வியத்நாமில் தனது நேரடித் தலையீட்டினால் டைபும் தலைமை யில் பொம்மை அரசாங்கத்தை உருவாக்கி யதுடன் 1956-ல் ஒப்பந்தத்தின்படி நடாத் தப்படவேண்டிய வியத்நாம் முழுமையிலான பொதுத்தேர்தலை நிராகரிக்கச் செய்தது. டைபும் தலைமையிலான பொம்மை அரசாங் கம் பிரெஞ்சு காலனியாதிக்கத்திலிருந்து விடு பட்ட வியத்நாமை அமெரிக்க நவீன காலனி யாதிக்கத்திற்குள் சூழ்ச்சியாகப் பிணைப்பதை கண்டு வியத்நாமிய மக்கள் கொதித்தெழுந் தார்கள். மீண்டும் வியத்கொங் (Viet Cong) என்ற அமைப்பு உருவாகியது, மக்களின் முழு ஆதரவுடன் அவர்கள் நடாத்திய போராட்டம் 1975-ம் ஆண்டு வெற்றியில் முடிந்தது.

இவ்வகையில் தமிழீழப் போராட்ட மானது பிரதானமாக ஒரு தேசிய எல்லைக் குள் ஒரு குறிப்பிட்ட தேசிய இனத்திற்குள் நடைபெறும் போராட்டம் அல்ல. பூகோள ரீதியாக ஒரு நிலப்பரப்புக்குள் பிணைக்கப் பட்ட இரண்டு தேசிய இனங்கள் கலாச்சார ரீதியாகவும், மதரீதியாகவும் தொன்மைக் காலமாக முரண்பட்டு வாழ்ந்து வந்துள்ள னர்.

> **சிறையிலிருந்து...!**
>
> ● எனது சிறைக்கூட வாழ்வில் நான் சிறையில் அடைபட்டுக்கிடந்த அந்தக் கூண்டில் நான் சந்தித்த மனிதர்கள் எல்லாம் என்னைச் சித்ர வதை செய்யவந்த சிங்களச் சிப்பாய்களே... ஏறத் தாழ சுமார் 18 மாதங்களாக நான் மனித நேய முள்ள எந்த மனிதனையும் சந்தித்ததில்லை. சுகாதாரமான காற்றைக்கூட நான் சுவாசித்த தில்லை... அந்த நீண்டகாலப் பகுதியில் என்னை நோக்கித் தமது நேசக்கரங்களை நீட்டியவை கரப்பான் பூச்சிகளும் எலிகளும்தான்... சிறைக் கூடத்தின் கரையோர உச்சியில் ஏற்பட்டிருந்த சிறுதுவாரமொன்றிலிருந்து உட்புகுந்த அந்தச் சிறுசூரிய ஒளியைக் கண்டு மகிழ்வேன்... நான் கைது செய்யப்பட்டதிலிருந்து தொடர்ச்சியாக ஆறுமாதங்கள் எனது கைகள் விலங்கிடப்பட்டே இருந்தன... மனித நேயமற்ற இந்த நிகழ்வுகளால் நான் பாதிக்கப்படவில்லை. ஏனெனில் எனது இதயத் தொட்டிலில் தாய்நாட்டின் விடுதலை யைத் தாலாட்டிக் கொண்டிருக்கிறேன்.
>
> —ஒரு போராளியின் கடிதத்திலிருந்து.

1948-ல் முற்றுப்பெற்ற அந்நிய ஆதிக் கத்துக்குப்பின் ஏற்பட்ட பாராளுமன்ற ஆட்சிமுறை கட்சி அரசியலுக்கு வழிகோலி யது. முதலாளித்துவ அமைப்பில் முற்போக்கு திட்டங்களுக்கும் கொள்கைகளுக்கும் வாய்ப் புகள் இல்லாதமையால் முதலாளித்துவ அரசியல் கட்சிகள் மக்களிடம் செல்வாக்கு பெறுவதற்காகவும், ஏனைய முற்போக்கு அரசியல் கட்சிகள் மக்களிடம் செல்வாக்குப் பெற்று மக்களை ஒரு சரியான போராட்ட முறைக்குக் கொண்டு செல்வதைத் தடுக்கு முகமாகவும், மக்களைப் பிளவு படுத்தி வைக்க, மக்களிடம் நிலவிவந்த கலாச்சார, இன, மத, மொழி முரண்பாடுகளை மேலும் கூர்மையடையச் செய்யும் இனவாத கோஷங் களை முன்வைக்கத் தொடங்கின.

படிப்பகம்

www.padippakam.com



மக்களின் சமூகச் சீர்கேடுகளுக்குச் சுரண்டல் பொருளாதாரம்தான் காரணம் என்பதை அரசியல் கட்சிகளின் இனவாதக் கோசங்கள் மறைத்தன மட்டுமன்றி இன முரண்பாடுகளை மேலும் கூர்மையாக்க வழி வகுத்தது. இனவாதக் கோசங்கள் அரசியல் ஆதாயம் தருவதைக்கண்ட அரசியல் கட்சிகள் இனவாதக் கொள்கைகளை மேலும் தீவிரமாக்கி மக்களிடம் செல்வாக்குப்பெற முனைந்தன. தொன்றுதொட்டு நிலவிவந்த இருதேசியஇனங்களின் முரண்பாடுகள் முறையாகக் களையப்படாமல் அரசியல் ஆதாயங்களுக்காக மேலும் வலுப்படுத்தப்பட்டு மக்கள் முழுமையாக இனவாதத்திற்கு உட்படுத்தப்பட்டனர்.

தமிழீழப் போராட்டங்களுக்கான காரணங்களைக் களைய முற்படாத சிங்கள இனவாத அரசு தமிழ்மக்களை ஆயுத முனையில் ஒடுக்க முனைந்தது. 'மக்களின் நியாயமான போராட்டங்களில் மக்கள் கையில் ஏந்தும் ஆயுதங்களை எதிரிதான் நிச்சயிப்பான்' என்ற தோழர் லெனினின் கூற்றுக்கேற்ப தமிழ் மக்களின் போராட்டம் ஆயுதம் தாங்கிய போராட்டமாக மாறியது.

சிங்கள இனவாத அரசானது தான் அரசாட்சிக்குவரக் காரணமாகவிருந்த சிங்கள இனவாதக் கொள்கைகளைக் கைவிட முடியாத நிலையில், முதலாளித்துவச்சந்தை தமிழீழ விடுதலையால் பாதிக்கப்படும் என்பதோடு மட்டுமல்லாமல் தமிழீழப் போராட்டம் ஒரு உண்மையான அரசியல் பொருளாதார விடுதலைக்கு வழிகோலிடுமானால் அது சிங்களப் பகுதி மக்களையும் அத்தகையதொரு போராட்டத்தை நோக்கிக்கொண்டு செல்லும் என்பதையும் உணர்ந்துள்ளனர்.

இன்று அரசாட்சியில் இருக்கும் இனவாத அரசானது தனது அரசியல் வெற்றிக்கு வழிகோலிட்ட தீவிரஇனவாதம், விசுவரூபம் எடுத்துக்கொண்டதையும் இனித் தாங்கள் விரும்பினாலும் அகற்ற முடியாதளவிற்கு அது மக்களிடம் வேரூன்றியிருப்பதையும் நன்குணர்ந்துள்ளனர். இனவாதம் தங்கள் மதத்தின் மறுமலர்ச்சிக்கு வழிகோலுவதைக் கண்ட புத்தபிக்குகள் இன்று இனவாதத்தின் மூலம் மக்களின் மேல் உள்ள தங்கள் மதத்தின் பிடிப்பையும் மேலும் இறுக்கமாக்கியுள்ளார்கள்.

இந்நிலையில் தமிழீழப் போராட்டத்திற்குத் தீர்வு காணவேண்டும் என்று சிங்கள அரசின் நோக்கமாக இருக்கமுடியாது. மாறாக இப்போராட்டத்தை முற்றிலும் தங்களின் அரசியல் நலனுக்காகப் பயன்படுத்தவே முனைந்துள்ளனர் என்பதனை அவர்களது நடவடிக்கைகள் தெளிவுப்படுத்துகின்றன.

கிட்லரின் பாசிச அரசினால் கோடிக் கணக்கான யூதர்களைப் படுகொலை செய்ய முடிந்தது என்றால் சிங்களப் பாசிச அரசும் 35 இலட்சம் தமிழ்மக்களைப் படுகொலை செய்ய முடியும் என்ற எண்ணமும்; அத்தகைய எண்ணங்களை நிறைவேற்றக்கூடியவகையில் இன்றைய சிங்கள அரசின் நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளதையும் நாம் காண்கிறோம். கிட்லருக்கு ஆரியஇன மேன்மை யென்றால் ஜெயவர்த்தனாவிற்குச் சிங்கள இனம், கிட்லருக்கு எஸ்எஸ் படைகள் என்றால் ஜெயவர்த்தனாவிற்கு கஜபா அணி என்று தொடங்கி ஒவ்வொரு அம்சங்களிலும் கிட்லரின் பாசிச அரசின் குறையம்சங்கள் சிங்கள அரசிடம் காணக்கூடியதாக உள்ளது.

கிட்லரின் அரசானது உலகத்தைத் தனது அரசாட்சிக்குள் கொண்டுவரக்கூடிய வல்லமை கொண்டு இருந்தமையாலும் உலக நாகரீகம் என்பது ஜெர்மனியர்களால் வழிகாட்டப்படும் என்று அவர்கள் கருதியமையாலும் சிறிதும் அச்சமின்றி மரணத் தொழிற்சாலைகள் (Death Factories) உருவாக்கி யூதர்களைக் கொன்று குவித்தனர்.

ஆனால் ஜெயவர்த்தனாவின் சிங்கள இனவாத அரசு கிட்லரைப்போல் நேரடியாக மரணத் தொழிற்சாலைகளை ஏற்படுத்தித் தமிழர்களைக் கொன்று குவிக்க முடியாத நிலையில் இருப்பதால் மாற்றுமுறைகளைக் கையாள முனைகிறது.

பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் மக்களை அவர்கள் வாழும் இடங்களிலிருந்து அப்புறப்படுத்திப் பட்டினி போடுவதும் கிட்லர் யூதர்களைச் சிறைசெய்து முகாம்களில் அடைத்து உணவு கொடுக்காமல் அவர்களைக் கொன்றதும் ஒரே நோக்கத்திற்காகக் கடைப்பிடிக்கப்பட்ட இரண்டு வழிகள் என்பதனைச் சரித்திரம் அறிந்தவர்கள் ஒப்புக்கொள்வர்.

இந்நிலையில் தமிழீழப் போராட்டமானது எந்தவிதமான வடிவங்களில் கொண்டு செல்லப்படவேண்டும் என்பதை நாம் கவனமாக ஆராயவேண்டும். கிட்லரின் யூத இனப்படுகொலை உலகஅரங்கில் யூத இனத்தவர் மேல் அனுதாபம் கொள்ள வைத்தமையும் அவ்வனுதாபமே. சியோனிசவாதிகள் பலஸ்தீனத்தில் ஆக்கிரமிப்புச் செய்து கொண்டிருந்த இடத்தை இஸ்ரவேல் என்ற நாடாக அங்கீகாரம் செய்யக் காரணமாக இருந்தது என்பதனை நாம் அறிவோம். அவ்வகையில் தமிழீழம் அமைப்பதற்கும் ஏனைய நாடுகளின் ஆதரவு இல்லாவிட்டாலும் அனுதாபமாவது பெற்றிருக்க வேண்டும் என்பதை எவரும் மறுக்கமுடியாது. உலகம் இன்று பாசிசக் கொள்கைகளை முற்றிலும் அநாகரீகமானது

படிப்பகம்

www.padippakam.com



என்று ஒதுக்கி வைத்துள்ள நிலையில், ஜெயவர்த்தனாவின் பாசிச அரசுக்கெதிரான நடவடிக்கைகள் சிங்கள இனத்திற்கெதிராகப் பாசிசவழியில் இனப்படுகொலை மூலம் நடாத்தப்படுவது நிச்சயமாக உலக அரங்கில் தமிழினம் மீது அனுதாபத்தை ஏற்படுத்தாது.

அதேவேளையில் தமிழீழம் அமைப்பது தங்களது தனிப்பட்ட தலைமையில்தான் நடாத்தப்பட வேண்டும்; இல்லாவிடில் தமிழீழமே அமையவிடமாட்டோம் என்று எண்ணத்தக்க வகையில் இயக்கங்கள் உட்பூசலில் ஈடுபட்டுக்கொண்டுள்ள நிகழ்வுகள் துரதிஷ்டவசமானவையே.

சிங்களப் பாசிசம் தமிழ் மக்களைப் படுகொலை செய்துகொண்டிருக்கும் இவ்வேளையில் தமிழ் மக்களைக் காப்பாற்றுவது தமிழீழம் அமைப்பதினால் மட்டுமே முடியுமே தவிர வீரசாகசங்களினால் முடியாது.

எதிரி இராணுவத்தின் ஒரு பிரிவை அழிப்பது எதிரியின் இராணுவத்தை முறியடித்ததாகாது. 1941-ம் ஆண்டு தொடக்கம் 1943-ம் ஆண்டுவரை கிட்லரின் இராணுவம் சுமார் ஒரு கோடியே எண்பது இலட்சம் சோவியத் இராணுவ வீரர்களைக் கொன்று குவித்தது. ஆனாலும் கிட்லர் வெற்றியடைய முடியவில்லை என்பது யாவருமறிந்த உண்மை.

தமிழீழத்தில் கெரில்லாத் தாக்குதல்கள் சிங்களப் பாசிச அரசிற்குத் தமிழ்மக்களைப் படுகொலை செய்வதற்கு வாய்ப்பாகவே பயன்பட்டுள்ளதையும் சிங்கள மக்களிடையே தற்போதை அரசு வலுவடையத் துணை புரிந்துள்ளதையும் காணக்கூடியதாகவுள்ளது.

இந்நிலையில் முழுமையான இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதினால் மட்டுமே தமிழீழம் காணமுடியும் என்பது உறுதியாகின்றது. இவ்வகையில் இளைஞர்களுக்குத் துப்பாக்கி சுடப் பயிற்சி அளிப்பதினாலும் இராணுவ உடுப்புகளை அவர்களுக்கு அணிவிப்பதனாலும் ஒரு முழுமையான இராணுவ நடவடிக்கைக்குத் தேவையான இராணுவத்தை உருவாக்கிவிட முடியாது என்பதை நாம் நினைவில் கொள்ளுதல் வேண்டும்.

இலட்சியம் தளராமை, தாக்குதல் நடவடிக்கைகள், சிறப்பாக இடம் பெயரும் தன்மை, துருப்புகளின் செறிவு, சிக்கனமான முயற்சிகள், விரைவாக இயங்குதல், பாதுகாப்பாக இருத்தல், உணர்வுபூர்வமான உறுதிப்பாடு, நிர்வாக மேன்மை, சூழ்நிலைக்கேற்ப இலகுவில் செயல்படக்கூடிய தன்மை போன்ற யுத்தத்திற்கான பத்து அடிப்படை அம்சங்களையும் சிறப்பாகச் செயல்படுத்தக்கூடிய ஒருமுகப்படுத்தப்பட்ட அமைப்பு, தேவையான இடங்களில் தேவையான அளவு துருப்புக்களை, குறித்த நேரத்தில் நிலைநிறுத்தக் கூடிய வகையில் இயங்கும் இராணுவமே சிறந்த இராணுவம் என்று அழைக்கப்படும்.

இந்நிலையில் எதிரி இராணுவத்திடமிருந்தும் சிங்கள இனவெறியர்களிடமிருந்தும் எமது மக்களைக் காப்பாற்றுவது என்பது விடுதலை இயக்கங்கள் தனித்தியங்கிச்செய்யக்கூடிய காரியம் அல்ல.

மாறாக இயக்கங்கள் தொலைநோக்குப் பார்வையில்லாமலும், வீரசாகசங்களில் ஈடுபட்டும் உணர்ச்சிகளுக்கு இடம் கொடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்வதாலும் தமிழீழப் போராட்டம் எதிரிக்குச் சாதகமாக அமையக்கூடிய வாய்ப்புகள் உண்டு என்பதை இயக்கங்கள் உணரவேண்டும்.

இன்றைய நிலையில் அனைத்து இயக்கங்களும் குறைந்தபட்சம் ஒரு பொதுவேலைத் திட்டத்தின் கீழ் இயங்க முன்வராதவரை தமிழ் மக்களுக்கு விடிவு இல்லை என்பதை உணர்வோமாக.

அனைத்து ஆயுதங்களும் பொது எதிரியை நோக்கித் திரும்பட்டும்! ●

---

# வேரும் விழுதுகளும்...!

எங்கள் வேர்கள்
இந்த மண்ணில்

அறுபடமுடியா
ஆழப்பதிந்துள்ளன:

எங்கள் தாய்கள்
எங்களைக் கருவுற்ற
மசக்கைக் காலங்களில்

அதிக மண்ணைத்
தின்றார்கள்போலும்!
அதுதான்
இந்த மண்ணிற்கும்
எங்கள் வேர்களுக்கும்
அப்படியொரு உறவு.

உறவின் நெருக்கம்
உதிரம் சிந்தும்

உதிரப் பசளையில்
வேர்கள்
இன்னும் ஆழப்பதியும்;
ஒருநாள், வேர்கள்
விருட்சமாகும்;
விருட்சம்
இந்த மண்ணின்
விடியலை நோக்கும்: ●

படிப்பகம்

www.padippakam.com





# கவிதாஞ்சலி!

வ. ஐ. ச. ஜெயபாலன்

இன்னும் சிறைமீழா
எம்முடைய தேசத்தின்
மண்ணில் மணல்கரையில்
என்றும் நிலைக்கும் ஐயா
உன்னுடைய காலடிகள்
உன்னுடைய காலடியின்,
எண்ணற்ற தமிழ் இளைஞர்
இட்டஅடி நூறு எடுத்தஅடி பல்நூறு.

தமிழீழ வீரத்தின் நாற்றாம் காலாய்
செழிக்கின்ற வல்வைத்தாய் ஈன்ற செல்வா!
சிங்களத்துச் சிறைகளினை தகர்த்து மீண்டாய்
திருமகனே
மரணமொரு சிறையோ தோழா!

செந்தமிழின் இலக்கியத்துத்
தேடரிய மாவீரா
எங்களது கண்களினை
இந்துக் கடலாக்கி
துருவத்து விண்மீனாய்
திசைகாட்ட எழுந்தாயோ!

சின்னம் சிறுபடகில்
சிங்களத்துக் கடற்படையின்
கண்ணுள் விரல்விட்டு ஆட்டி
நிதம் கழித்தாய்.
எத்தனையோ இரவுகளில்
எதிரிகளின் கப்பலுடன்
சதுரங்கம் ஆடி வென்றாய்
பாக்கு நீரிணையைப்
பாண்டிக் கடலாக்கி நின்றாய்.

உந்தன் படகு
உடைந்து எரிந்த வேளையிலே
துள்ளிக் கடலில் சுறாவாய் நீ வராததென்ன?
தோழன் ஒருவனிடம்
சேதி அனுப்பி விட்டு
காலங்களை வென்ற
கடற்படையின் தளபதியாய்
சின்னப் படகோடு
சுவர்க்கம் புகுந்ததென்ன?

நீயுமுன் தோழர்களும்
சிறுபடகுமா யிருந்தால்
பாயும் கடலும்
பாவியரின் கடற்படையும்
மூக்கில் விரல் வைத்தஞ்ச
சித்து விளையாடிச்
சிரித்துக் கரை சேர்ந்திருப்பாய்.

பசியில் நம் சோதரர்கள்
படுந்துயரம் சகிக்காமல்
உணவுச் சுமை காவியன்றோ
ஊர்காவல் தெய்வமென
எம்முளத்துள் கோவில் கொண்டாய்.
எங்களது பாண்டி
இருப்பொழிந்தான் என்பவன் யார்?

இந்தக் கரையில்
இருக்கும் அகதிகட்கு
அந்தக் கரையலவன்
ஆத்மாவின் பலமாக
அந்தக் கரையில்
போராடும் வீரருக்கு
இந்தக் கரையிலவன்
இதயத்தின் துடிப்பாக
ஆதலினால்
எங்களது பாண்டி
இருப் பொழிந்தான் என்பலன் யார்?


கடல் வல்வை பாண்டி
காற்றிலே தூதனுப்பும் பொறிவல்லோன்
மீசாலை தந்த சின்னமலை
கற்றவரின் நெல்லியடிக்
கரும் புலியாம் எம் ரூபன்
பண்டார வன்னி யனின்
பரம்பரையின் வீரத்தில்
காத்தானின் பின்வந்த
டக்ளஸ்
கிளிநொச்சி செம்புலி
அம்பியென எங்கள் இந்த
பாண்டவரை எந்தப்
படை வெல்லும்
தோழர்களே!

இந்துக் கடலறிய
இரு கரையும் மணலறிய
மரணத்தை வென்றவரின்
மாவீரம் காணாமல்
கண்களைக் கடலாக்கி
கதறுவதேன் தோழர்களே?

தமிழீழ விடுதலையின்
வித்தான திருமேனி
ஈழத்துச் செம்மண்
பரப்பெல்லாம் துளிர்த்திருக்கும்
எங்கள் திசையான
நம் பாண்டி பொன்னுடலம்
கலங்கரை விளக்காகி
ஈழக்கரையில் என்றென்றும் நின்றெரியும் ●

படிப்பகம்

# விடுதலைக்கு [illegible] விமானம்



—மிகையில் தெவ்யாதயேவ்—

இந்தக் கதையின் கர்த்தாக்கள் இருவர்—ஒருவர் விமானி; மற்றொருவர் எழுத்தாளர். முன்னவர் தாம் வாழ்ந்தது, அனுபவித்தது அனைத்தையும் வாய்மொழி மூலம் நினைவு கூர்ந்தார்: பின்னவர் அதனைக் காகிதத்தில் வடித்தெடுத்தார். மேலும், விமானி மிகையில் தெவ்யாதயேவ் வாழ்க்கையில் கடும் சோதனைகள் பலவற்றையும் அனுபவிக்க நேர்ந்தவர். 1944 ஜூலையில் அவர் வானில் நடந்த விமானப் போர் ஒன்றில் காயமுற்றார்; எரிந்து கொண்டிருந்த விமானத்திலிருந்து வெளியே குதிக்கும் நிர்ப்பந்தத்துக்கும் உள்ளானார்: அவருக்கு நினைவு திரும்பியபோதோ, அவர் அதற்குள் யுத்தக் கைதியாகி விட்டிருந்தார்.

அதிகாரி: ஏன் பிடிவாதம் பிடிக்கிறாய்? எப்படியானாலும் நாங்கள் தான் வெல்லப் போகிறோம்.

யுத்தக் கைதி: நீங்கள் பின்வாங்கிக் கொண்டிருக்கும்போது நீங்கள் எப்படி வெல்ல முடியும்?

அதிகாரி: எங்களிடம் ஒரு புதிய ஆயுதம் இருக்கிறது. அது ரஷ்யர்களைப் பின்வாங்கச் செய்யும் நிர்ப்பந்தத்தை நிச்சயம் உண்டாக்கி விடும்.

யுத்தக் கைதி: நவீன ஆயுதங்களைக், குறிப்பாக டாங்கிகள், விமானங்கள் ஆகியவற்றைப் பெருமளவில் செய்து குவிப்பதில் சோவியத்யூனியன் இப்போது பெருமளவுக்கு ஜெர்மனியை எட்டிப் பிடித்து விட்டது. எனவே ஜெர்மனி தோற்கடிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை.

அதிகாரி: இவன் கடைந்தெடுத்த கம்யூனிஸ்டு. பிணங்களைச் சுட்டெரிக்கும் பிரேதக் கிடங்குதான் இவனுக்குப் புத்தி புகட்ட முடியும்.

தெவ்யாதயேவ் தமது காயங்களிலிருந்து மீண்டு, ஏதோ அதிசயம் போல் உயிர் பிழைத்து விட்டார். காவல் முகாம் வாழ்க்கையின் கொடிய நிலைமைகளுக்கு மத்தியிலும், பால்டிக் கடலில் யூஸ்தோம் என்ற தீவிலிருந்த ஜெர்மன் ரகசிய விமானத் தளமொன்றில் கடின உழைப்பாளர்களாகப் பாடுபடும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கப்பட்டிருந்த சோவியத் யுத்தக் கைதிகளின் ஒன்பது பேரை ஒரு கோஷ்டியாக ஒன்று திரட்டுவதில் அவர் வெற்றி கண்டார். அவர்கள் எல்லோரும் அங்கிருந்து கூண்டோடு தப்பிச் செல்வதற்கான ஒரு

படிப்பகம்

www.padippakam.com



*திட்டம் தெவ்யாதயேவின் மனத்தில் படிப்படியாக உருக்கொண்டது. எனினும், கனரகக் குண்டு வீச்சு விமானங்களை, அதிலும் எதிரியின் விமானங்களைக் கையாண்டு பழக்கப்படாத போர் விமான ஓட்டியாகவே தெவ்யாதயேவ் இருந்தார் என்ற உண்மையைக் கருதிப் பார்த்தபோது, இந்தத் திட்டம் ஒன்றும் அத்தனை எளிதான பிரச்சினையாக இருக்கவில்லை.*

*இறுதியில் அந்த நாளும், 1945 பிப்ரவரி 8ஆம் தேதியும் வந்து சேர்ந்தது......*

## 1

''ஷினெல்லர்!''

இந்தச் சொல் எலும்பும் தோலுமான கைதிகளின் பிறந்த மேனியான முதுகுகளின் மீது சவுக்கடி மாதிரி விழுந்தது. கொட்டடிகளின் குறுகி நீண்ட நடைகூடங்களின் வழியாக அவர்கள் கரிய நதிப் பிரவாகம்போல ஓடோடியும் வந்தனர்.

உடை உடுத்தவும் படுக்கையைச் சுருட்டி வைக்கவும் எங்களுக்கு ஒரு நிமிட நேரமே இருந்தது: அதிகாலையில் நேரும் இந்த உயிர் வாழும் போராட்டத்தில் தோற்றுப் போனால், அந்தக் கும்பல் எங்களைக் கீழே பிடித்துத் தள்ளி, மிதித்துத் துவைத்து, முடமாக்கி விடும் எனவே, ஏனையோர் இருபுறத்திலும் எங்களுக்கு ஆதரவாக இருக்கக் கூடிய விதத்திலும், நாங்கள் அவர்களுக்கு ஆதரவாக இருக்கக்கூடிய விதத்திலும் அந்தக் கும்பலின் நடுமத்தியில் போய் நின்று கொள்ளவே நாங்கள் முயல வேண்டியிருந்தது. அன்றைக்கோ நான் அந்த உயிரைக் காக்கும் நடுப்பாகத்தில் மிகவும் கவனமாக இருந்தேன்; ஏனெனில் அந்த நடுப்பாகத்தில் இருந்த கும்பல், என்னைக் காவலாளிகளின் பார்வையில் படாமல் மறைத்துக் கொண்டது.

இதன்பின் நான் அங்கிருந்து நழுவி, கொட்டடிகளுக்குப் பின்னால் படிந்திருந்த வெண்பனிப் படிவங்களின் வழியாக நடந்து சென்றேன். அங்கு ஒரே இருளும் குளிருமாக இருந்தது. எனினும் ஓர் எண்ணம் என்னுள் சூடேறச் செய்தது. ''அந்த நாள் இன்றுதான்!'' என்று எனக்கு வாய்விட்டுக் கத்த வேண்டும் போலிருந்தது.

வான்யா கிரிவெனோகோவ் தமது கொட்டடிக்கு அருகில் கைதிகளின் கும்பல் ஒன்றுக்கு மத்தியில் நின்று கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் அவர் என் புஜத்தைப் பற்றிப் பிடித்து, அதனை வலியெடுக்கும் விதத்தில் அழுத்தினார்: ''என்ன நேர்ந்து விட்டது உங்களுக்கு? அவர்கள் பார்த்துக் கொண்டிருப்பார்கள்!''

''இன்றுதான்'' என்று நான் தழுதழுத்துக் கூறினேன்.

''ஆம். இன்றுதான்!...''

நான் கும்பலில் மறைந்து விட்டேன். சொகொலோவின் கொட்டடி வீடு இருக்கும் திசை நோக்கி நடந்தேன்.

மூன்றாவது பிளாக். சொகோலோவ் உத்தரவுகளையும் வேலைப் பொறுப்புக்களையும் வழங்கிக் கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் அப்படியே உறைந்து நின்று விட்டார். நான் அருகில் செல்லவில்லை—அவருக்காகக் காத்து நின்றேன்.

''என்ன நேர்ந்தது?''

''இன்றுதானே!''

''இன்றுதானா?''

''நான் நெம்செங்கோவைப் பார்க்கப் போகிறேன்.''

காவலாளிகள் எந்திரத் துப்பாக்கிகளை எங்களை நோக்கி நீட்டியவாறு, தமது நெடிய காவல் கூடங்களில் அமர்ந்து கொண்டிருந்தனர். அவர்களும் சரி, அவர்கள் ஆயுதங்களும் சரி, இனி என்னை என்ன செய்யமுடியும்? விரைவிலேயே இந்தக் காவல் கூடங்களுக்கும் மேலாக, முள்வேலி அரணுக்கும் மேலாகப் பறந்து சென்று விடுவேன்.

நெம்செங்கோ திகைத்துப் போன தமது ஒற்றைக் கண்ணால் என்னை வெறித்து நோக்கினார். அந்த நேரத்தில் நான் அங்கு என்ன செய்துகொண்டிருந்தேன் என்று அவர் வியந்திருக்க வேண்டும்.

''இன்று நாம் தப்பித்துச் செல்கிறோம். வேலைக் குழுவில் நமது ஆட்கள் மட்டும் இருக்குமாறு நாம் பார்த்துக் கொள்ள வேண்டும்.''

நெம்செங்கோ தமது கண்ணில்லாத குழியின்மீது தொங்கிய கறுப்புத் துணியைச் சரிசெய்தவாறே 'சரி' என்று அமைதியாகச் சொன்னார்.

நான் குத்தொர்கின்னையும், பின்னர் எமெத்லையும் பிறரையும் தேடிச்சென்றேன்.

நான் படுமோசமாக இருந்தேன்: என் முகம் வீங்கி வக்கரித்துப் போயிருந்தது. என்னை ஏதோ வெறிபிடித்தவன் போல

படிப்பகம்

www.padippakam.com



அனைவரும் நோக்கினர். நானோ உடம்பெல்லாம் ஒரே துடி துடிப்போடு இருந்தேன். அவர்களது பார்வையிலிருந்து மாறுபட்ட பார்வையோடு உலகத்தையும் அவர்கள் எல்லோரையுமே பார்த்தேன். விமானத்தின் இறக்கைகளுக்கிடையில் என் தாயகம் காட்சியளிப்பதை நான் அப்போதே காண முடிந்தது. நான் அப்போதே இந்த நரக பூமியில் அல்ல—அந்தப் பூமியில்தான் நடந்து கொண்டிருந்தேன்.

என் கண்ணில் பட்ட எங்கள் கோஷ்டியினர் அனைவரிடமும் நான் விஷயத்தைச் சொன்னேன். பின்னர் நான் கொட்டடிக்கு வரவேண்டியிருந்தது. ஆம். கடைசி முறையாக நான் அங்கு செல்லத்தான் வேண்டியிருந்தது.

ஒரு மூர்க்கமான கட்டளை, கும்பலை அணி அணிகளாகப் பிரிந்து நிற்கச் செய்தது.

கம்மாண்டண்ட் மெதுவாக, அழுத்தலாக நடந்து வந்தான்; அவனது ஒவ்வோர் காலடியும் காங்கிரீட் தளத்தின்மீது மேலும் மேலும் அருகில் கேட்டது. நூற்றுக்கணக்கான பேர்கள் தமது இருதயப் படபடப்பை அமைதிப்படுத்த முயன்றவாறே, மூச்சைப் பிடித்துக் கொண்டு நின்றனர். கம்மாண்டண்ட் எனக்குச் சற்றே தொலைவில் வந்து நின்றான்; அர்த்தபுஷ்டி மிக்க சில விநாடி அமைதிக்குப்பின் இவ்வாறு கேட்டான் :

''யாருக்கேனும் ஏதாவது குறைகூற வேண்டியிருக்கிறதா?''

அங்கு பூரண அமைதி நிலவியது. அவனது பார்வைக்கு முன்னால், அவனது குரலுக்கு முன்னால், உயிருள்ளவை அனைத்துமே ஒடுங்கிவிட்டன. ஒரு மரண அமைதி, மயான அமைதி குடிகொண்டது. குறை கூறினால், அதற்கு விலையாக நாங்கள் உயிரைத்தான் கொடுக்க வேண்டும்.

எத்தனை பேர் தப்பித்துச் சென்றனர் என்று அவர்கள் இன்று உன்னிடம் கேட்கும் போது, உன் அசடு வழியும் முகத்தை நான் பார்க்க விரும்புகிறேன் என்று நான் என்னுள் கூறிக்கொண்டேன்!

''வேலைகளைத் தீர்மானித்துக் கொள்ளுங்கள். சரி, போங்கள்!''

அணிவகுப்பு முடிந்தது. என் தோளிலிருந்து ஒரு பாரம் குறைந்தது. இனி விமானத் தளத்துக்குச் செல்ல வேண்டியதுதான்.

## சித்திரவதைக்குள்ளாக்கப்பட்ட பலஸ்தீனக் குழந்தைகள் !

இஸ்ரேலுக்குச் சொந்தமான வங்கி ஒன்றின் மீது கல்லெறிந்தார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் பாலஸ்தீனக் குழந்தைகளில் சிலர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் ''அல் பாரம்'' என்ற இடத்திலுள்ள அரசியல் கைதிகளை வைத்திருக்கும் சிறைச்சாலையில் சிறைவைக்கப்பட்டுத் தீவிர சித்ரவதைக்குள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இத்தகைய ஒழுக்கமற்ற முறையிலான சட்டநடவடிக்கைகள் அப்பாவிக் குழந்தைகள் மீது திணிக்கப்படுவதை அறிந்த செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த அதிகாரிகள் அந்தக் குழந்தைகளைச் சென்று பார்ப்பதற்கு, நரகமாகிக் கொண்டிருக்கும் அந்தச் சிறைக் கூடத்தைச் சேர்ந்த அதிகாரிகள் அனுமதி வழங்க மறுத்துவிட்டனர்.

அந்தக் குழந்தைகளை மீட்பதற்காக அமர்த்தப்பட்ட வழக்கறிஞர்களையும் சிறையினுள்ளே செல்லச் சிறை அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. மாறாக சிறைகூடத்திற்கு முன்பாகவுள்ள முற்றத்திலேயே சிறுவர்களைப் பார்ப்பதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டதாகச் செய்திகள் கூறுகின்றன.

## 2

வேலைக் குழுக்கள் ஒவ்வொரு நாளும் மாற்றியமைக்கப்பட்டன. எனவே பல சமயங்களில் நமக்கு முற்றிலும் தெரியாத, அதேபோல் நம்மையும் முற்றிலும் அறியாத நபர்கள் அவற்றில் இடம் பெறுவர். இதனால் எங்கள் கோஷ்டி ஐந்து பேர்களைக் கொண்ட இரு வேறு குழுக்களாகப் பிரிந்து விடும். அன்றோ நாங்கள் பத்துப்பேரும் ஒரே குழுவில் கட்டாயம் இருந்தாக வேண்டியிருந்தது. எனவே இது விஷயத்தில் சொகோலோவும் நெம்செங்கோவும் பிரதான பொறுப்பைப் பகிர்ந்து கொண்டனர். வேலைக்குழுக்களிலுள்ள நபர்களை மாற்றும் அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது.

கடைசி நேரத்தில் சில சிரமங்கள் நேர்ந்த போது, சொகோலோவ் எப்படியோ நிலைமையைச் சமாளித்து முடித்தார். எங்கள் குழுவில் செர்கியுகோவ், அதமோவ், எமெத்ஸ் ஆகியோர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்; மற்றவர்கள் விடுபட்டுப் போயினர்.

படிப்பகம்

www.padippakam.com



''முன்னே போங்கள்!'' என்று உத்தரவு பிறந்தது; அதன்பின் ஒரே நிமிடத்தில் நாங்கள் வாசலுக்கு வந்து விட்டோம்.

''ஒன்று, இரண்டு, மூன்று'' என்று அந்தக் காவலாளி எங்கள் ஒவ்வொருவரையும் மார்பிலும் முதுகிலும் இடித்து நபர்களைக் கணக்குப் பார்த்தான்; நான் அதனைத்தாண்டி வந்தபோது, ஒரு படு பாதாளத்தையே தாண்டி வந்துவிட்டது போல் உணர்ந்தேன்.

எங்களுக்கு நன்கு தெரிந்திருந்த நெட்டையான கழுகு மூக்குப் படைத்த எஸ்எஸ் காவலன் ஒருவன் எங்களது சிறு கோஷ்டிக்குப் பொறுப்பேற்றுக் கொண்டான். அவனை நாங்கள் நன்கு நினைவில் வைத்திருந்தோம். ஏனெனில் ஆத்திரமூட்டும் விதத்தில் நாம் லேசாக நடந்துக்கொண்டால் கூட உடனே அவன் தன் துப்பாக்கி மட்டையை வீசி, மானாங்காணியாய் நம் தலையில் அடித்து விடுவான்.

விமானத்தளப் பிரதேசத்தின் வழியாகச் செல்வதற்கு முன், மீண்டும் நாங்கள் நிறுத்தப்பட்டோம். அங்கு உள்ள காவலர்கள் சோதிப்பதில் கவனக் குறைவு மிக்கவர்களே. என்றாலும் இன்றோ நாங்கள் அவர்களைக் கண்டு பயந்தோம். எஸ்எஸ் காவலனுக்குக் கணப்பு நெருப்பு மூட்டுவதற்காக, நாங்கள் எப்போதும் கொஞ்சம் விறகைச் சுமந்து செல்வது வழக்கம். அவ்வப்போது அவனும் நெருப்புக்கருகில் வந்து எங்களையும் குளிர் காய்ந்து கொள்ள அனுமதிப்பதுண்டு. இன்றோ அந்த விறகுக் கட்டுக்குள் ஒரு கடப்பாரையும் மறைத்து வைத்துக் கொண்டு சென்றோம். என்றாலும், எதுவும் நேராமல் நாங்கள் அவர்களைக் கடந்து சென்று விட்டோம்.

பொழுது விடிந்து கொண்டிருந்தது. பீரங்கிகள் மற்றும் விமானங்களின் கருநிழல் வடிவங்கள் துலாம்பரமாகத் தெரிந்தன. லேசாகக் காற்றும் வீசியது; வானத்தில் உயரே மேகங்கள் அவ்வப்போது உருண்டு கடந்து சென்றன, ஆயினும் இஞ்சின்களின் இடையறாத இரைச்சல், பெட்ரோல் லாரிகளின் கண்சிமிட்டும் விளக்குகள், குண்டுகளை ஏற்றிச் செல்லும் வண்டிகள் ஆகிய அனைத்தும், நிர்ப்பந்த வசமாகப் பல நாட்கள் சோம்பிக் கிடந்த அந்த விமானத் தளம் இப்போது சுறுசுறுப்போடு செயல்படத் தொடங்கிவிட்டது என்பதற்குச் சான்று பகர்ந்தன.

நான் காது கொடுத்துக் கேட்டேன்; கவனித்தேன். இந்தப் பறப்புக்கள் எல்லாம் எங்கள் திட்டங்களில் குறுக்கிடாது. மாறாக, இவை அவற்றை எளிதாக்கவே செய்யும். கர்ச்சித்துக் கொண்டிருக்கும் இத்தனை இஞ்சின்களுக்கு மத்தியில், பல விமானங்கள் தமது எந்திரங்களில் சூடேற்றிக் கொண்டு, ஓடு பாதையின் வழியாக உருண்டு வருவதற்கு மத்தியில், மேலும் ஒருவிமானம் வெளியேறிப் பறந்து செல்வதை எவரும் கவனிக்க மாட்டார்கள். லேசான மேகங்களும், வெண்பனித் துகள்களும் என்னைச் சற்றேனும் கவலைக்குள்ளாக்கவில்லை. அவை இருந்தாலும், இது பறந்து செல்வதற்கேற்ற பருவநிலை தான்!

(தொடரும்)

**பிரித்தானியப் பிரதமர் திருமதி-தாட்ச்சருக்கு கலாநிதிப் பட்டம் வழங்குவதற்கு ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகம் மறுத்துள்ளது.**

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் திருமதி தாட்சருக்கு கலாநிதிப்பட்டம் வழங்க மறுத்துள்ளது. வழங்கப்பட வேண்டிய கலாநிதிப்பட்டத்தை ஆட்சேபித்து சுமார் 5000 மாணவர்கள் கையெழுத்திட்ட மனுவொன்றினை ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தினால் கலாநிதிப்பட்டம் வழங்குவதற்கு நியமிக்கப்பட்ட தேர்வுக்குழுவிடம் சமர்ப்பித்துள்ளனர்.

முன்பு ஒருமுறை இதைப் போன்ற ஆட்சேபனை மனுவொன்றினை பாகிஸ்தான் முன்னால் பிரதமருக்கு எதிராக வழங்கியுள்ளனர் ஒக்ஸ்போர்ட் மாணவர்கள். இந்த வரிசையில் திருமதி—தாட்சர் இரண்டாவது இடத்தை வகிக்கின்றார். திருமதி தாட்சருக்கு எதிராக மூன்றில் இரண்டு பங்கினர் வாக்களித்துள்ளனர்.

பாகிஸ்தான் முன்னால் பிரதமர் திரு. பூட்டோவே பங்களாதேஷில் நடந்த இனப்படுகொலைக்கு காரண கர்த்தா என்ற கருத்தின் அடிப்படையிலேயே அவருக்கு கலாநிதிப் பட்டம் வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

திருமதி— தாட்சரும் அப்படியான நடவடிக்கைகளில் ஈடுபட்டவர் என்ற குற்றச்சாட்டில் பேரிலேயே அவரது கலாநிதிப் பட்டத்திற்கு ஒக்ஸ்போர்ட் மாணவர்களால் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

# ஆய்வறிஞர்களுக்கு..!

தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான இன ஒடுக்குதல் இனக் கொலையாக மோசமடைந்துள்ள இன்றைய நிலை தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மேலும் துரிதப்படுத்தி வருகின்றது. ஆயுதப் போராட்டத்தில் நம்பிக்கை கொண்ட அமைப்புக்களின் பாரிய வளர்ச்சியே எதிரியை வட்டமேசைப் பேச்சுவார்த்தை என இறங்கி வரச் செய்துள்ளது. எனினும் போர்க்களத்தில் சரணடையாத மக்களைப் பேச்சு வார்த்தை மேசையில் சரணடைய வைப்பதே எதிரியின் சூழ்ச்சியாக இருந்தது.

மக்கள் சரணாகதியடைவதற்குத் தயார் எனவும் விடுதலை அமைப்புக்களே மக்களை அரசுக்கு எதிராகத் தூண்டி வருகின்றன எனவும் ஸ்ரீலங்கா இனவாத அரசு பிரச்சாரத்தை ஆரம்பித்துள்ளது.

மக்கள் சரணாகதியின் பக்கம் என்றும் இதே வேளை மக்களுக்கும் விடுதலை இயக்கங்களுக்கும் இடைவெளியுள்ளது என்றும் உலகை நம்பவைப்பதே எதிரியின் தந்திரமாக இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மக்களே வேர்களாகவும் விருட்சங்களாகவும் இருக்கின்றார்கள். மக்களது விடுதலைப் போராட்ட எழுச்சியின் மலர்களும், கனிகளுமே தமிழீழ விடுதலை இயக்கங்களாகும்.

மக்களே தியாகத்தின் பக்கத்திலும், போராட்டத்தின் பக்கத்திலும், தவிர்க்க முடியாத வெற்றிகளின் பக்கத்திலும், உறுதியாக இருக்கின்றனர்.

கிராமங்கள் தோறும் மக்கள் இன ஒடுக்கல் என்ற தீயில் வெந்து கருகும் போது தமிழீழ விடுதலை வேட்கையிலேயே தமது ஆத்மாவைப் பொருத்தி நிற்கின்றனர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மக்களது சகல மட்ட அமைப்புக்களையும் அபிலாசைகளையும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் கருத்தில் கொண்டே தமது கொள்கைகளையும் நடைமுறையையும் வகுத்துச் செழுமைப் படுத்துகின்றது.

இன ஒடுக்கலுக்கு எதிரான மக்கள் நடவடிக்கைகளின் உச்சக் கட்டமே விடுதலைப் போராட்டமாகும்.

எனவே இந்தத் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில மக்களின் பங்குகள் மேலும் மேலும் மேம்படுத்திக் செல்லப் படும்போதே பரந்துபட்ட மக்களுக்கு எதிரான சகல முயற்சிகளையும் தகர்த்து எறியவும் உண்மையான நோக்கோடு பரந்துபட்ட மக்களால் மக்களுக்காக அமைக்கப்படும் பரந்து பட்ட மக்களது ஆட்சியை நாம் நிறுவுதல் கூடும்.

விடுதலைப் போராட்டத்தில் மக்களது பங்கை எவ்வண்ணம் மேம் படுத்தலாம் என்பது தொடர்பாக அரசியல். சமூக, பொருளாதார, விஞ்ஞான, வைத்தியத் துறைகள் சார்ந்த கட்டுரைகளை நாம் தொடர்ந்து வெளியிட விரும்புகிறோம். எனவே அது சார்ந்த கட்டுரைகளைத் தங்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம்.

படிப்பகம்

www.padippakam.com

பதிவு எண்: TN /MS (C) 669

14/9/33/37/41/39/44

# மூன்றாவது மண்டல நாடுகளும்

# ஆயுத செலவினங்களும்!

- அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் 1970 ஆம் ஆண்டளவில் தமது மொத்தச் செலவினத்தில் 7·2 வீதத்தை ஆயுதக் கொள்வனவிற்காகச் செலவு செய்துள்ளன. அந்தத் தொகை 1982 ஆம் ஆண்டிலிருந்து 16 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

- மூன்றாவது மண்டல நாடுகளின் இராணுவச் செலவினங்கள் 1970ஆம் ஆண்டில் 27·8 ஆயிரம் மில்லியன் அமெரிக்க டொலராக (DOLLAR) இருந்து 1982 ஆம் ஆண்டிலிருந்து 125 ஆயிரம் மில்லியன் அமெரிக்க டொலராக (DOLLAR) உயர்ந்துள்ளது.

- அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் 27 வறிய நாடுகள் தமது இராணுவச் செலவினங்களாக வருடத்திற்கு ஏறத்தாழ ஆயிரம் மில்லியன் அமெரிக்க டொலரைச் செலவிட்டுள்ளன.

- மூன்றாம் உலகநாடுகளின் ஆயுதப் படைகளில் ஒன்றரைக்கோடி ஆண்கள் உள்ளனர். இது உலகின் மொத்த ஆயுதப் படையினரில் 60%மாகும்.

- அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் ஆயுதக் கொள்வனவில் மூன்றில் இரண்டு பங்கு ஆயுதங்களை வெளிநாட்டிலேயே கொள்வனவு செய்துள்ளன. இத்தகைய நாடுகள் தொழில்வள முதலாளித்துவ நாடுகளின் ஆயுதச் செலவினங்களின் விகிதத்தைப் போல இருமடங்கினைத் தமது ஆயுதச் செலவினங்களாகக் கொண்டுள்ளன. ஆயுதக் கொள்வனவின் வேகவளர்ச்சி இடைவிடாது குண்டுவெடித்துக் கொண்டு இருக்கும் மத்திய கிழக்கு நாடுகளிலும், லத்தீன் அமெரிக்க நாடுகளிலுமே பதிவாகியுள்ளன.

இந்நிலைமைகளுக்குக் காரணமென்ன? உலகம் முழுவதிலும் அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது வேட்டைக் காடாக்கும் முயற்சியில் போர்களுக்குத் தூபமிட்டுக் கொண்டு வருவதேயாகும்.

"மக்கள் பாதை மலர்கிறது" தொடர்பாளர்
சகல விபரங்களுக்கும்:-
சு. மோகன்,
இல. 28, சி என். கே சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை 600 005
தமிழ்நாடு.

ஆசிரியர், வெளியிடுவோர்:- வே. அன்புச்செல்வன், 12/12, தாசுதீன் கான்பகதூர் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-600 005. அச்சிடுவோர்:- பாவாணர் அச்சகம், கலவைத் தெரு, சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.

படிப்பகம்